விலை ரூபா 2-00 ✶ 8 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 27 மாசி 6 ஐ-அவ் 26 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (17—2—85) இதழ் 7

## இலங்கை அகதிகள் பிரச்னை
# ரஜீவ் கருத்து

[ஹைதராபாத்]

''இந்தியாவில் தஞ்சம் புகந்திருக்கும் பெருமளவான இலங்கை தமிழ் அகதிகளின் பிரச்னையைத் தீர்ப்பதற்காக இந்தியா அந்த நாட்டின் மீது இராணுவ ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது'' என்று இந்தியப் பிரதமர் திரு ரஜீவ் காந்தி குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் இருந்து பெருமளவான தமிழ் அகதிகள் இந்தியாவில் தஞ்சம் [8-ம் பக்கம் பார்க்க]

## மறைந்த தமிழ்த் தலைவர் சுந்தரரின் இறுதி மரணசாசனம்
# எங்களுக்கென்று ஒரு தனிநாடு வேண்டும் !

[யாழ்ப்பாணம்]

''அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்ற பழமொழிக்கேற்ப இன ஒற்றுமையே நாட்டின் சுதந்திரத்துக்கு வழிகோலும். இதுவே ஒவ்வொரு இளைஞனும் கடைப்பிடிக்கவேண்டிய முதற் கொள்கையாகும்.''

இவ்வாறு மறைந்த தமிழ்த் தலைவர் சி. சுந்தரலிங்கம் தமிழ் மக்களுக்கென எழுதிவைத்துள்ள இறுதி மரண சாசனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மண்ணையும், தமிழ் மக்களின் விடுதலையையுமே பெரிதும் கருத்தில்கொண்டு வாழ்ந்தவரான அப்பெரியார், 1984 ஜூலை மாதம் 6ம் திகதி இம்மரண சாசனத்தை எழுதிக் கையெழுத்திட்டுள்ளார். அதில் ஐந்து பேர் சாட்சிகளாகக் கையெழுத்திட்டுள்ளனர்.

ஈழ ஸ்ரீலங்காவில் வசிக்கும் ஈழத் தமிழ் இன மக்களுக்கு அன்பான இறுதி வேண்டுதல் என்று ஆரம்பித்துள்ள பெரியாரின் மரண சாசனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''எங்கள் இனம், எங்கள் மொழி, சமயம், சந்ததி சுதந்திரமாக வாழவேண்டுமானால் எங்களுக்கென்று ஒரு நாடு வேண்டும்.''

[8-ம் பக்கம் பார்க்க]

## இந்திய மீனவர் சுட்டுக்கொலை
# எம். ஜி. ஆர். கண்டனம்

(சென்னை)

இந்திய மீனவர்கள் இருவர் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு தமிழக முதலமைச்சர் திரு எம்.ஜி ராமச்சந்திரன் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையொன் (8ம்பக்கம் 4ம் கலம் பார்க்க)

## இன்று இறுதி யாத்திரை

(வவுனியா நிருபர் ரி விவேகராசா)

மறைந்த தமிழ் பெரியார் திரு.சி. சுந்தரலிங்கத்தின் பூதவுடல் சகல மரியாதைகளுடனும், தமிழ் கலாசார முறைப்படி இன்று காலை 9.30 மணியளவில் நாவற்குளம் திருலிங்கபுரம் தோட்டத்தில் தகனம் செய்யப்படும். வவனியா கண்டிவீதியிலுள்ள இல்லத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெற்றபின் 9 மணியளவில் இறுதி ஊர்வ (8ம் பக்கம் 5ம் கலம் பார்க்க)

## ஆசிரியர் கொலைக்கு எதிராக போர்க்கொடி !

[யாழ்ப்பாணம்]

முருங்கன், மன்னார்ப் பகுதிகளில் நான்கு பாடசாலை ஆசிரி (8ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## உணவுமுத்திரை திட்டம் அடுத்த ஆண்டு ரத்து !

(பி ராஜரட்ணம்)

உணவு முத்திரைத் திட்டம் அடுத்த வருடம் முதல் ரத்துச் செய்யப்படலாம் என்றும், இத்திட்டத்துக்குப் பதிலாக மானியத் திட்டமொன்று அமுல்படுத்தப்படலாமென்றும் தெரியவருகிறது.

வருமானம் குறைந்த குடும்பங்களுக்கான இத்திட்டத்திற்கு பெரும் செலவு ஏற்படுவதனால் இத் திட்டத்தை ரத்துச் செய்து புதிய மானியத்திட்டத்தில வசதி குறைந்தவர்களுக்கு வேலை வாய்ப்பும் வழங்கபபடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கடும் நடவடிக்கை எடுக்க மே. ஜேர்மன் அரசு முடிவு!

மே. பெர்லின், பெப் 16

அரசியல் தஞ்சம் கோரி வரும் வெளிநாட்டு அகதிகள் தொடர்பாக மேற்கு ஜெர்மன் அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இந் நடவடிக்கை தொடர்பாக அகதிகள் சம்பந்தப்பட்ட சட்ட விதிகளை மறுபரிசீலனை செய்யும்படி மே.ஜெர்மன் அதிபர், அமைச்சர் குழுவென்றைப் பணித்துள்ளார்.

இது வரை காலமும் அகதிகள் விடயத்தில் மே ஜெர்மன் தாராள போக்கைக் கடைப்பிடித்ததென்றும், ஆனால் இதனால் வழங்கப்பட்ட சலுகைகளை அகதிகள் துஷ்பிரயோகம் செய்து வருகின்றனர் என்றும் கூறப்பட்டது.

பவேரியா, பேர்டன் குட்டம் பேர்க் போன்ற மேற்கு ஜெர்மன் மாநிலங்கள் அகதிகள் நெருக்கடி அதிகரித்து வருவதை மே ஜெர்மன் அரசுக்குச் சுட்டிக் காட்டி வருகின்றன. (8-ம் பக்கம் 2-ம் கலம் பார்க்க)

## நேற்று 9 படகுகளில் 400 அகதிகள்!

[சென்னை]

இலங்கையிலிருந்து 9 படகுகளில் 400 தமிழர்கள் அகதகளாக நேற்றும் இராமேஸ்வரம் [8ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

# பூஸாவிலிருந்து இன்று விடுதலையாகும் 51 இளைஞர்

[கல்வியங்காடு நிருபர் ஐ. சண்முகலிங்கம்]

காலி பூஸாவிலிருந்து இன்று விடுதலையாகி யாழ்ப்பாணம் புறப்படும் 51 இளைஞர்கள் விபரம் வருமாறு:—

வாரி அருணோ காவலன், சிவப்பிரகாசம், சூசைப்பிள்ளை அன்ரன் றெனல்ட், வையாபுரி ஆறுமுகம், எஸ்தாகி அருள்தாஸ் இரத்தினம், கனகசபை ஜெகநாதன் குணம், செபஸ்தியாம்பிள்ளை யேசுதாஸ், அலோசியஸ் யஸ்ரின், செல்லத்துரை யேசுராசா, கந்தையா காளிமுத்து, செவதிராசா குகநேசன். பண்டாரி ஒணபாலு, விஞசி கணேசன்குமார், சின்னத்தம்பி கணேஷ், கதிர்காமு லோகிமாஸ், அருமத்துரை மதியழகன், கந்தையா முருகானந்தம், நவரத்தினம் மனோகரன், சின்னத்துரை முருகையன், இரத்தினவேல் சவீந்திரன், முருகன் இராசேந்திரம், கந்தையா இராசமோகன், செல்லையா இராசதுரை, கண்ணப்பு இரங்கன், வைரமுத்து இராசகுமார், சிவசுந்தரம் சிவனேசராசன், வைரமுத்து சிவஞானம், முருகேசு சிவசக்திவேல், சுப்பையா சண்முகம் குகன், கந்தையா சிறீஸ்கந்தராசா, சோனன் சுப்பிர (8ம் பக்கம் 2ம் கலம் பார்க்க)

## அமைச்சர் லலித் கூறுகிறார்
# ''தமிழ்ஈழ பயங்கரவாதிகள் இன வாதிகள் அல்ல''

(கொழும்பு)

'தமிழ் ஈழ பயங்கரவாதிகளின் நோக்கம் இனவாதம் அல்ல. மாறாக மாக்ஸிஸ அரசாங்கம் ஒன்றை இலங்கையில் உருவாக்குவதே அவர்களின் குறிக்கோளாகும். ஈழ வானொலி மூலம் வெளியாகும் அவர்களின் செய்திகள் (8-ம் பக்கம் 4-ம்கலம் பார்க்க)

## துப்பாக்கிச்சூட்டுக்கு கோப்பாய் வாசி பலி!

(யாழ்ப்பாணம்)

கோப்பாயைச் சேர்ந்த சவரிமுத்து [55 வயது] என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

ரோந்துப் படையினர் வாகனம் ஒன்றைத் தடுத்து நிறுத்தியபோது அதில் இருந்தவர்கள் தப்பி ஓடியதாகக் கூறப்படுகிறது. இதனைத் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டபோது அவர் மரணமானார் என்றும் குறிப்பிட்ட வாகனம் இராஜ வீதியில் வைத்து தீயிடப்பட்டு (8ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## 'ஆலால்' ஜீப் கடத்தப்பட்டது

[யாழ்ப்பாணம்]

கோப்பாய்த் தொகுதியின் முன்னாள் எம் பி திரு ஆ மு. ஆலாலசுந்தரத்தின் பாவனையி (8ம் பக்கம் 2ம் கலம் பார்க்க)

## திடீரென மறைந்த முல்லைத்தீவு அகதிகள் ! விபரம் இதோ

[யாழ்ப்பாணம்]

முல்லைத்தீவில் 5ு தீவிரவாதிகளை ராணுவம் சுட்டுத் தள்ளியதாக அறிவிக்கப்பட்ட அதே நேரத்தில் முல்லைத்தீவு அகதிகள் முகாமிலிருந்து காணாமல் போன அகதிகள் விபரம் வருமாறு:-

முகாம் ஏ

முல்லைத்தீவு பீற்றர் தேவா (8ம் பக்க 3ம் கலம் பரர்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

அழுத்தமான ஆட்டுக்கல், அம்மி, கல்உரல் அனைத்தும் கைதேர்ந்த கலைஞர்களால் கடையப்பட்டது. தயாரித்து அளிப்போர், சூரியாஸ்டோர்ஸ் வவனியா. கந்தசாமி கோவில் வீதி, சாவகச்சேரியில் அல்லது சுல்தான் அப்துல் காதர் சகோதரர்கள், கண்டி வீதி, சாவகச்சேரி. 1787

யாழ்ப்பாணக் கச்சேரி, பிரபல கல்லூரிகள் ஆகியவற்றுக்கு அண்மையில், ஈச்சமோட்டையில் வீடுகட்ட உகந்த ஒன்றரைப்பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு:- கு. துரைராசா, ஓவசியர், 29, சந்தனமாதா கோவில் றேட், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 1801

வீடு கட்டுவதற்கு தேவையான யன்னல், கதவு, மற்றும் நிலைகள், கூரைமரங்கள், கூரை, அஸ்பெஸ்டோஸ் சீட்டுகள், இரும்பு. B throom Fittings, பிணைச்சல், பூட்டு முதலியவை விற்பனைக்குண்டு. தொடர்பு:- தி. குகபாலன், 84, ரெம்பிள் றேட். யாழ்ப்பாணம். 1813

திருநெல்வேலியில் குடியிருப்பதற்கு வசதியான ஒரு பரப்புக்காணி விற்பனைக்கு உள்ளது தொடர்பு; ச. புவனசுந்தரம் நொத்தாரிசு, வளாக ஒழுங்கை. 1834

யாழ்ப்பாணம் K. K. S. வீதியில் புதிய கல்வீடு மூன்று படுக்கை அறைகள், கார் கறுஜ் மற்றும் சகல வேலைகள் முடிவடைந்த நிலையில் ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: லிப்ருஸ் லிமிட்டெட், R. G. பில்டிங், 70-ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1835

யாழ்ப்பாணம் பீச் றேட்டில் 1½ பரப்புக் காணியில் மாடி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: லிப்ருஸ் லிமிட்டெட், R. G. பில்டிங், 70- ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1836

யாழ்ப்பாணம் சீனிவாசகம் வீதியில் 2 பரப்பு வீடு கட்டக்கூடிய காணித் துண்டும், ஆஸ்பத்திரி வீதியில் ½ பரப்புக் காணியும் வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: லிப்ருஸ் லிமிட், R. G. பில்டிங், 70- ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1837

யூரியா உரம் விற்பனைக்குண்டு. M. G. M. For age Stores, No 208, முதலாம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 22611 1839

சீமாட்டி பாம்ஸ் உற்பத்திப் பொருட்கள் முட்டை. புரொயிலர் இறச்சிகோழிமொத்த சில்லறை விற்பனவுக்கு உண்டு. சீமாட்டி ரெக்ரைல்ஸ் 158, நவீனசந்தை, யாழ்ப்பாணம். ரெலிபோன்: 24096 (1843)

நல்ல நிலையில்உள்ள ஒஸ்ரின் BMC 24 சிறி தொடரிலக்கமுள்ள லொறி உடன் விற்பனைக்குண்டு 112, சிவராசா அவனியூ, பலாலிறேட், யாழ்ப்பாணம். 1845

மோட்டர்ஸ், ஒக்சிசன் வெல்டிங் பெட், கொம்பிரஸர் ...ரில், லெத்டூல்ஸ், சோக், மெயின் சுவிஸ், ஸ்டாட்டஸ். தராசு விற்பனைக்குண்டு தொடர்பு: 4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். 1859

## விற்பனைக்கு

முல்லைத்தீவு—பரந்தன் பிரதான வீதி 4-வது மைலில் (பிரதான வீதிக்கு அருகாமையில்) விரைவில் நீர்ப்பாசனம் பெறக்கூடிய நான்கு ஏக்கர் வயலும், அதற்கு அண்மையில் நீர்ப்பாசன வசதியுள்ள அரை ஏக்கர் வயலும் விற்பனைக்குண்டு. (வயல் எல்லைகளாக ஆற்றோரம் உண்டு) விபரங்களுக்கு:- ப. ஸ்ரீஆனந்தராசா, 2ம் கட்டை, முரசுமோட்டை அல்லது வ. காங்கேசன், கந்தசுவாமிகோவிலடி, நீர்வேலி. 1847

பாவிக்கப்படாத இரண்டு முதிரை யன்னல்கள், நான்கு 15 அடி கப்புகள் பாவித்த கப்புகள், பனை வளைகள் விற்பனைக்கு உண்டு. நன்றாகக் காய்ந்த விறகு கையிருப்பிலுள்ளது. தம்பிஐயா விறகு காலை, 46, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை. 1849

நல்லூரில்-கோவில், பாடசாலை முதலியவற்றுக்கு சமீபமாக, 1½ பரப்பில் அமைந்த 4 அறைகள் Hall உள்ளடக்கிய நவீன வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1822, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1822

மானிப்பாய் ஆஸ்பத்திரிச் சந்தியில் 4 பரப்புக்காணி மூன்று படுக்கை அறை கொண்ட கல்வீட்டுடன் பிரயோசன மரங்களுள்ளது உடன் விற்பனைக்குண்டு தொடர்பு விளம்பர இல; 1796 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1796

அரியாலையில் கண்டி வீதி அண்மையில் 4 பரப்பும், கச்சேரியடியில் 1¼ பரப்பும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இல: 1795, C/o ஈழநாடு லிமிட்டட், யாழ்ப்பாணம். 1795

மானிப்பாயில் புளியடி மார்க்கெட் லேனில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; இ. தருமராஜா, புளியடி மார்க்கெட்லேன், மானிப்பாய் தெற்கு, மானிப்பாய் 1876

காங்கேசன்துறை வீதி நாச்சிமார் கோவிலடியில், காந்தி கராச்காணி 1பரப்பும், வண். வடமேற்கு கேசாவில் வீதியில் 1½ பரப்புக்காணி சகல வசதி கொண்ட வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க விஷ்ணுகாந்தி, 591, காங்கேசன்துறை வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். 1868

காரைநகர் வடக்கு விக்காவில் 32 பரப்புக்காணி மூன்று வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வேலன் ஆறுமுகம், விக்காவில், காரைநகர். 1867

## வாடகைக்கு

ஆனைக்கோட்டையில் பிரதான வீதிக்கு அருகாமையில் சகல வசதிகளுடைய பெரிய வீட்டின் பகுதி வாடகைக்குண்டு, தொழில், குடும்பவிபரம் என்பனவுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல,1878, மே/பா ஈழநாடு லிமிட்,யாழ்ப்பாணம். 1878

## விற்பனைக்கு

நாகம்ஸ் தியேட்டருக்கு அருகிலுள்ள சுற்றுலா வீதியில் 300 யார் தொலைவில் வீடு கட்டக்கூடிய 2½ பரப்புக்காணி விற்பனைக்கு உள்ளது. V குகேஸ்வரன் (Bank of Ceylon முன்பாக) K. K. S. Road, சுன்னாகம் அல்லது M. A. கனகரட்னம், 29 / 17, தேவாலய ஒழுங்கை, ஒட்டுமடம், யாழ்ப்பாணம். 1850

அஸ்பெஸ்ட் கூரைச்சீட்டுக்கள் (12' நீளம்) மற்றும் எஸ்-லோன் கூரைப்பீலிகளும், வேப்பம் பலகை, கினிசப்பு பலகைகளும் விற்பனைக்கு உண்டு. திருமதி த. மயில்வாகனம் (96) 38, யாழ் வீ., யாழ்ப்பாணம் 1884

குளிர்சாதனப் பெட்டி (BOSCH) 6 மாதம் பாவித்தது. விற்பனைக்கு உண்டு. பார்வையிடும் நேரம் திங்கள் 18-2-85 காலை 9 — 5 மணிவரை ஏபெக்ஸ் ஏஜன்சி, (குளோபல் ரெலக்ஸ்க்கு அருகாமையில்) காங்கேசன்துறை வீதி, M. P. C. S. யாழ்ப்பாணம். 1883

சலப்பினம் இல்லாத 1½மாத அல்சேசன் நாய்க்குட்டிகளும், கனே மோட்டர் டிரக்டரும்-ரெயிலரும் பின்வரும் விலாசத்தில் விற்பனைக்கு உண்டு, ம. மகா, 8/1, கற்பகவிநாயகர் வீதி, சுண்டுக்குளி. (கச்சேரி நல்லூர் வீதிக்கு அருகாமையில்.) 1882

## தேவை

யாழ்ப்பாணம் குருகுலத்தைச் சேர்ந்த 28 வயதுடைய அழகிய, இந்துமத, விஞ்ஞானப்பட்டதாரியான அரசாங்கத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றும் 7ல் செவ்வாய் குற்றமுள்ள மணப்பெண்ணிற்கு அரசாங்கத்தில், தனியார் துறையில், கூட்டுத்தாபனத்தில் அல்லது பிறநாட்டில் உயர்பதவிவகிக்கும் வரன் தேவை. குறிப்புடன்தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1764, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 1764

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையிலுள்ள எவர்சில்வர் இன்டஸ்ரீஸ் நிறுவனத்திற்கு கீழ்க்காணும் தொழில்களுக்கு அனுபவமுள்ளவர்கள் தேவையான சான்றிதழ்களுடன் நேரில் வரவும். (1) கன்னரவேலை (Tinkers), (2 பொருத்துனர் (Fitter), Ever Silver Industries (Pte) Ltd, Industrial Estate, Atchuvely 1864

## வகுப்புகள்

பல்கலைக்கழக பட்டதாரி படிப்புக்கு சமமான பாடத்திட்டத்தின்படி கலை (B A), வர்த்தகம் (B Com.), விஞ்ஞானம் (B.Sc ) (Physical and Maths, Bio) பட்டப்படிப்புகள் கல்வித் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் ஆரம்பிக்கப்படவுள்ளன A/L நான்கு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் 5-3-85 முன் விண்ணப்ப படிவங்களுக்கு தொடர்பு கொள்ளவும். அதிபர், உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 1828

## வாடகைக்கு

சப்பல் வீதியில் ஓர் வீட்டின் பகுதி (Anex) வாடகைக்கு கொடுக்கப்படும். தொடர்பு C. கணேசன், 25, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். T. phone: 22160. 1833




## 31ம் நாள் நினைவுஅஞ்சலி

### ஜோண் பிலிப்

மலர்வு: 1-5-1893 உதிர்வு: 19-1-1985



அன்னாரின் ஆத்மசாந்திக்காக 18-2-1985 திங்கட்கிழமை காலை 6-00 மணிக்கு யாழ். சுண்டிக்குளி புனித ஸ்நாபக யுவானியார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

...ன் பிரிவால் துயருறும்
அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், மைத்துனி, பெருமக்கள்.

854, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 1877

## 46-வது நாள் நினைவஞ்சலி

### சபாபதிப்பிள்ளை
### முருகேசு புவனேஸ்வரன்

தோற்றம்: 26-01-62 மறைவு: 03-01-85



''இவர் காரைநகர் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் ஆவர். இவரின் இறுதிக்கிரியைகளில்கலந்து கொண்டவர்களுக்கும்அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் பத்திரிகை மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

''பிரிந்தாயோ எம்மை விட்டு. எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்தி விட்டு பார்தன்னை விட்டு, விட்டு சேர்ந்திடவே திக்கரை முருகன் பாதம்'' ''உன் நினைவோ நெஞ்சைவிட்டு அகலவில்லை உன் பிரிவால் வாடுகின்றோம் என்றென்றும்'' நீங்காத நினைவு தன்னில் உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்தனை செய்கின்றோம்.

அன்புத்தாயார், அன்புசகோதரர்கள், சகோதரிகள்.

திருமதி மு. நாகம்மா 'தன்னை'
களபூமி,
1861 காரைநகர்.

## ஓராண்டு நினைவஞ்சலி

### திருமதி
### வள்ளிப்பிள்ளை
### நடராசா



(காலம் சென்ற மலாயன் பென்சனர் சி. நடராசாவின் பிரியபத்தினி)

மலர்வு; 09-03-1916
உதிர்வு: 29-02-1985
திதி: 17-02-1984

எம்மைத் தவிக்கவிட்டுப் பிரிந்து ஓராண்டு சென்ற போதிலும் எங்கள் இதயங்களில் என்றென்றும் ஒளி வீசிக்கொண்டே இருக்கிறீர்கள் தங்கள் அன்பும் ஆதரவும் எம்மைக்காத்தது போல் இவ்வுலகில் யார்தான் எம்மைக்காக்க உள்ளார்கள் என்று ஏங்கி கண்ணீர் வடிக்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்திபடைய பிரார்த்திக்கின்றோம்.

'இராணி மகால்' அன்பு மக்கள்,
இளவாலை. மருமக்கள்,
1844 பேரப்பிள்ளைகள்.

# தனிநாடு கோரிக்கையை முதலில் முன்வைத்த பெரியார்

க. கிருஷ்ணபிள்ளை
(தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முன்னைநாள் அதிபர்)



அமரர் பேராசிரியர்பதவி வகித்த காலம் இலங்கை ஒரு குடியேற்ற நாடாக இருந்த தென்பதை நினைவு கூருதல் நன்று. ஆங்கிலேயருடைய ஆதிக்கம் உச்ச நிலையிலிருந் தது, இங்கிலாந்தில் கல்வியை முடித்துப் போட்டிப் பரீட்சை மூலம் இந்திய நிர்வாகச்சேவை யில் (I. C S.) சேர்ந்து அதனை விட்டு, இலங்கை நிர்வாகச் சேவையில்(C. C. S.) சிறிதுகா லம் கடமையாற்றி அதனையும் உதறித்தள்ளினர். காரணம் வின்று உதவும் மனப்பான்மை உடையவர். ஆங்கிலேய அதிகாரிகளுடன் சொற்போர் புரிவதில் இன்பங்கண்டார். 1936ம் ஆண்டு சர்வகலா சாலைத் தமிழ்ச் சங்கக்கொண் டாட்டங்களை முதலாம்தவணை இறுதியில் வழக்கம் போல வைப்பதை இரண்டாந் தவ ணைக்குப் பின்போடுமாறு ஆங் கிலேய அதிபர் கேட்டபோது அமரர் அதைத் தடுத்து வழ மைபோல் முதல் தவணை நடத்த உதவினர்.

ஒரு ஆங்கிலேயர் அவருடைய முதற்கடமை ஆங்கிலேயஆட் சிக்கெதிரான மாணவர்களை வேவு பார்ப்பது. அத்தகைய மாணவர்கள் கல்வியில் எவ்வளவு சிறந்த சித்தி பெற் ருலும், அரசாங்க உயர் உத்தி யோகங்கள் பெற முடியாது. அமரருடைய உத்தியோக அந் தஸ்து உயர் அதிபருக்கு அடுத் தது. ஒரேயொரு சந்தர்ப்பத் தில் அதிபரும் உப அதிபரும் கடமைக்கு வரமுடியாத போது, அமரர் அதிபரின் கந்தோரிலுள்ள இரகசியக் கோப்புக்களை [Secretfiles] அதிகாரத்துடன் படித்துக் குறிப்புகளும் எடுத் ததாகக் கேள்வி.

அமரருடைய இளைய சகோ தரர் கலாநிதி அமிர்தலிங்கம் சமுத்திரப் பிராணிகள் (Marine Biology) சம்பந்தப்பட்ட பாடத்தில் நிபுணத்துவம் பெற்ருலும், அக்கால ஆங்கி லேய அதிபர் அவரை ஆசிரி யராக நியமிக்கத்துணியவில்லை காரணம், ''ஒரு லிங்கத்தைச் சரிக்கட்ட முடியாத நான், இன்னுமொரு லிங்கத்தை எடுத்தால் என்கதி அதோகதி தான்.'' அமரர் பேராசிரியர் என்ற முறையில் உயர் உத்தி யோகத்தரை நியமிக்கும் தெரி வுச் சபைகளில் அங்கத்தவ ராக இருந்தும், நீதி வழங்கப் படாமையால் கொதித்தெழு வதுண்டு. இத்தகைய தெரிவுச் சபைகளின் அநீதிகளைப் பற்றி சில கூட்டங்களிலும் பேசுவ துண்டு. அவர் அரசியலில் ஈடு பட யோசித்த காலத்தில், பேராசிரியருக்குரிய கடமை களில் தவறுகிருரென்ற வதந்தி கிளம்பியது. அந்த வருடம் அவருடைய ஐந்து மாண வர்கள் கணிதச் சிறப்புப் பட்டப் பரீட்சையில் முதற் பிரிவில் சித்தியெய்தி ஒரு சாதனையை நிலைநாட்டினர்.

சேர். பொன். இராமநாதனின் இலையை யூனியன் பிளேஸ் சந்தியில் அல்லது சிலேவ் ஐலன்ட் சந்தியில் வைக்க ஆயத்தம் நடந்த போது, இப் போதுள்ள பழைய பாராளுமன்றக் கட்டிடத் திற்கு அருகாமையில் வைப்ப தற்கு வாதாடி வென்றவர் அமரர் அவர்களே! அவ்வாறு அமரர் சுந்தரலிங்கத்துக்கும் ஒரு சிலை எழுப்ப மக்கள் குறிப் பாக சிங்கள மக்கள் குரல் எழுப்புவார்களா?

பாராளுமன்றத்தில் குறிப் பிடப்பட்டதுபோல தனித் தமிழ்நாடு வேண்டுமென்ற குரலை முதன் முதல் எழுப்பிய வர் அமரர் அவர்களே. ஆகவே அவர் அதிக காலம் விண்ணுலகத்தில் தங்கமாட் டார். மிக விரைவில் இங்கு பிறந்து தமது இலட்சியத்திற் காக உழைப்பார் என்பது திண்ணம்.

அவக்கு அனுமதிப்பத்திரத் திற்கு கையெழுத்துப்போடுவ தில் தனது பொழுது கழிந்தது என்பது. பின்னர் கொழும்பு ஆனந்தாக்கல்லூரியில் ஆசிரிய ராகக் கடமையாற்றினர்.

அக்காலத்தில் இலங்கை சர்வ கலாசாலைக் கல்லூரியில் கணிதப் பேராசிரியர் பதவிக்கு இங்கும் இங்கிலாந்திலும் மனுக்கள் கோரப்பட்டன. அமரர் மனுவைஅனுப்பவில்லை. ஆனல் இங்கிலாந்திலுள்ள பேராசிரியர் இவர் பெயரைச்

## ஒற்றுமைப்பட்ட ஒரு தேசம்

1962ம் ஆண்டு அரசாங்கத் திற்கு எதிராகத் தொடங் கிய சதியில் சிறைவாசம் அநு பவித்த ஒரு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த உயர் பொலிஸ் அதிகாரி சிறையி லிருந்து ஒரு கடிதம் மாத்தி ரம் எழுதும் உரித்தை அமரரு டன் தொடர்புகொள்ளப்பயன் படுத்தினர். அக் கடிதத்தை வாசித்தபொழுது வாழ்க்கை யில் முதல் முறையாக அமர ரின் கண்களில் நீர் வடிந்த

சிபாரிசு செய்தார். பின்னர்

சேர். பொன். இராமநாதனின் புத்திமதிக் கிணங்கி அவரில் அமரர் வைத்திருந்த மதிப்புக் காரணமாக அப்பதவியை ஏற் றதாகச்சொன்னர்.

கலைப்பாடங்கள் கற்றபடி யால் அமரரிடம் கல்விகற்கச் சந்தர்ப்பம் எழவில்லை. ஆனல் அவரின் சிறந்தகுணங்களை அவ தானிக்கக் கூடிய சந்தர்ப்பங் கள் ஏற்பட்டன கம்பீரமான தோற்றமும் நடையும் எவரை யும் வசீகரிக்கக்கூடிய பேச்சும், சிரிப்பும் அவரில் காணலாம். சாதி, மத பேதம் பாராது மாணவர்கள் எவரும் கஸ்டங் களில் மாட்டுப்பட்டால், முன்சாலைக் கல்லூரி அதிபர் தாக அமரரின் பாரியார் சொன்ன ஞாபகம்.

சர்வகலாசாலையின் மாணவர் விடுதியில் (Union hostel) பொறுப்பதிகாரியாக, அதற் குரிய சம்பளம் பெருது கடமை யாற்றி அரிய பாரம்பரியங்களை உருவாக்கினர், படிப்பு நேரம், உடை, மாணவர் சுதந்திரம் முதலியன இவரால் வரைய றுக்கப் பட்டன. இவைகள் இப்போதய சர்வகலாசாலையில் பேணப் படுவதில்லை.

இலங்கை சுதந்திரம் அடைய வேண்டும். அது மட்டுமல்ல, இங்கு ஒரு ஆங்கிலேயர் தானும் பணிபுரியக் கூடாது' இவை அமரருடைய அசைக்க முடியாத கொள்கை. அக்காலத்தில் சர்வகலா

## எப்போது?

இளைத்தவர் வாழ்வை ஏப்பம்
இடுவரோ இனிது வாழின்
உழைத்தவர் உதயம் வாழ்வில்
உற்றிடும் நாள்தா னெப்போ
விளைச்சலைக் காக்கப் போட்ட
வேலியே பயிரை மேயின்
அலைச்சலிற் காலம் போகும்
அறுவடை காண லெப்போ!

சாத்தானே வேதம் ஓதும்
சங்கதி மாறி மெய்ம்மை
காத்தோரின் கவலை போக்கும்
கதிரொளி காண்ட லெப்போ
மூத்தோரேகண்கள் விற்று
முழுமதி கொள்ளும் வேளை
ஏத்துவோர் கரங்கள் வெட்டி
எறிந்திடும் நாள்தா னெப்போ!

பொங்கிடும் வேட்கை என்னும்
புயலினைத் தேக்கி யுள்ளே
தங்கிடும் சுமையை முற்றாய்த்
தகர்த்திடும் கால மெப்போ
சங்கொடு பிறந்த நாதம்
சத்தியம் ஜயமே யென்னும்
எங்களின் நிலையைச் சாற்றும்
இன்பநா ளெப்போ எப்போ!!

தமிழரசி மலர்மாறன்.

# உறுதியே உயிர்

பணிவு வேண்டும். ஆனல் கோழைத்தனம் கூடாது. துணிவு வேண்டும் ஆனல் தலைக்கனம் கூடாது.

பணிவு பக்குவத்தை உண்டாக்கும்; துணிவு வல் லமையை நல்கும்.

பணிவும், துணிவும் இணைந்து பிணைந்தால்சிறப்பாய் அமையும் வாழ்வு.

பணிவுபெருமையைத் தரும். துணிவு செயல் வெற் றியை உண்டாக்கும் என்ருர் வள்ளுவர். துணிவு கொள்பவருக்குத் தாம் அறிவும் உணர்வும் துணை சேரும்.

துணிவு பிறந்து விட்டால், துன்பத்தைக் கண்டு அஞ்சத்தேவையில்லை. அச்சம் உள்ளத்தையும் உடலை யும் வதைக்கும். தீமையைக் கண்டு அஞ்சத்தான் வேண்டும் ஆனல் துணிச்சல் பிறக்கவேண்டிய இடத் தில் அச்சம் பிறக்கக் கூடாது. அது முட்டுக்கட்டை.

நாம் இன்று கொதிப்படைந்த மக்களாக வாழ்கின் ருேம். ''அன்பர்களே நமக்கு இன்று வெப்பம்தேவை யில்லை, வெளிச்சம்தான் தேவை'' என்கிருர் தத்துவ ஞானி சாக்கிரட்டீஸ்.

இன்று முடிவடையும் 'சுந்தரகாண்டத்தில்' துணி வின் சாதனைகளைக் கண்டோம்.

என்றும் அழியா வள்ளுவத்தில் பணிவின் பயிற்சி பெற்ருல் முரணுன பண்புகள் போல் தோன்றும் இவ்விரண்டும் எங்கள் தமிழ் இளைஞருக்கு உறுதி யோடு உழைத்து வாழ்வில் வெற்றி காணமுடி யும்.

# யார் இந்த சுந்தரலிங்கம்?

திரு. செ சுந்தரலிங்கம் அவர்கள் 'கதிர்காமம் கந்தன் கோவில் அன்றும் -இன்றும்' என்ற ஓர் ஆய்வு நூலினை 1980ம் ஆண்டிலே ஆங்கிலத்தில் எழுதினர். இது அமரர்பி. எஸ்.செட்டியார் அவர் களால் தமிழில் பெயர்க் கப்பெற்று 1982ல்அச்சாகி வெளியிடப்பட்டது. திரு. சுந்தரலிங்கம் அவர்கள் பற்றி அந்நூலில் திரு. செட்டியார் அவர்கள் எழுதியதை இங்கு தருகின்ருேம்.

திருவாளர் செ. சுந்தரலிங் கம் அவர்கள் சர். பி. இராம நாதன், சர். பி. அருணுசலம், எவ். ஆர். சேனநாயக்க, ஜேம்ஸ் பீரிஸ், வில்லி, நீதியர சர் அக்பர், டி. எஸ். சேன நாயக்க, எஸ். டபிளியூ. ஆர். டி. பண்டாரநாயக்க முதலா னவர்களுடன் ஆரம்பகாலம் முதல் இற்றைநாள் வரை இலங்கை அரசியலிலே மக்கள் பிரதிநிதியாகவும், மந் திரியாகவும், அடங்காத்தமிழர் முன்னணியின் தாபகராகவும் புகழ்ச்சி இகழ்ச்சிகளுக்கெல் லாம் அப்பாற்பட்டுத் தனக் குச் சரியெனக்கண்டதை நெஞ் சிலே வஞ்சமின்றி நேர்மைத் திறனுேடு பேசியும் செய்தும் களம்பலகண்ட மறத்தமிழன்; வன்னிநாட்டுக் கமக்காரன்.

சுபாஸ் சந்திரபோஸ், பண் டித நேரு போன்ற உலகத் தலைவர்களுக்கு உற்ற நண்ப ராய் விளங்கிய இவர் M. A. (Oxford), B. Sc (London), Bar-at-lawபோன்ற பட்டங்கள் பல பெற்று, இந் திய சிவில் சர்விஸ், இலங்கை சிவில் சர்வீஸ் முதலானவற்றி லும் சித்திபெய்தியிருந்தார். ஆரம்பத்திலே கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் உப அதிபராயும் பின்னர் இலங்கை சர்வகலாசாலை கணிதப்பேரா சிரியராகவும் கடமையாற்றி இன்று இலங்கையிலே பொதுவாழ்விலும், அர சியலிலும் பிரகாசித்துவரும் அநேகரை உருவாக்கி வைத்த வர் இவர்.

அடங்காப்பற்று வன்னியர் வாழ் வவனியாத் தொகுதி யின் பாராளுமன்றப் பிரதிநிதி யாக 1947இல் திரு. சுந்தரலிங் கம் தேர்ந்தெடுக்கப்பட்டார். தனது கொள்கைகளைத் தனது தொகுதிமக்கள் ஆதரிக்கிருர் கள் என்பதை உலகுக்கு எடுத் துக்காட்டத் தமது பதவியை மூன்றுமுறை ராஜினுமாச் செய்து மீண்டும் மீண்டும் மக் களால் தெரிவு செய்யப்பட்டு அரசியல் சரித்திரம் படைத்த வர் சுந்தரலிங்கம்.

''தமிழ் ஈழம்'' என்ற தனி நாட்டுக் கொள்கையின் பிதா வான திரு. சுந்தரலிங்கம் இலங்கை அரசியல் சம்பந்த மாகப் பல நூல்களை எழுதி வெளியிட்டிருக்கிருர்,

''Eylom'' Beginnings of Freedom Struggle- Dozen Documents by C.Suntheralingam With Candid Comments and Criticisms by Lord Soulbury''.

''Grievances of Eylom Thamils from Cradle to Coffin''.

''Plight of Eylom Thamils Under Colvin'sConstitution''.


என்னும் இவை போன்ற பிரசுரங்கள் பலவற்றை அவ் வப்போது வெளியிட்டுத் தமிழ் ஈழத்தின் அவசியத்தை எடுத்து விளக்கியுள்ளார்.

ஆயிரம் பிறைகண்டு தொண் ணூறாண்டுப் பராயத்தை அணமித்து நிற்கும் இவ்வேளை யிலும் அயராது நின்று ஈழத் திலே தமிழனுக்கிழைக்கப் படும் கொடுமைகளுக்கு நீதி கேட்கும் நோக்கத்துடனே தமிழ் முருகன் உறையும் கதிர் காமத் திருத்தலம் பௌத்த மதமாக்கப்படுவதை ஆட்சே பித்து உயர்நீதிமன்றத்திலே மனுத்தாக்கல் செய்துள்ளார் திரு.சுந்தரலிங்கம். இது பற் றிய விளக்கங்களைக் கொண்டு வெளிவருகிறது இக்கைந்நூல்.

## எமது சிறுகதை

# நீறு பூக்கின்ற ஏக்கங்கள்

- வன்னியூர் இரா. உதயணன்



குடியிருப்புக் குளத்தடிப் பிள்ளையார் கோவில் மணி காலை ஆறுமணிப் 'பூசைக்காக ஒலித்துக் கொண்டிருந்தது.

திலகர் பல் துலக்கி முகங் கழுவி சால்வையை உதறித் தோளில் போட்டுக் கொண்டார். அடுப்படியில் காலைச் சாப்பாட்டிற்கு ஆயத்தம் செய்துகொண்டிருந்த பொன்னம்மாள் தேநீர்க்கோப்பையுடன் எழும்பிவந்தாள். வரும்போதே ''என்னப்பா இண்டைக்கு நேரத்தோட வெளிக்கிடுறியள்'' கேட்டுக்கொண்டே வந்தாள்.

''நல்ல காரியமாய்ப் போறன். இப்ப ஒன்றும் கேளாதை, எல்லாம் வந்து சொல்லுறன்'' -திலகர் படலையைத் திறந்துகொண்டு நடந்தார். பொன்னம்மாள் அடுப்படிப்பக்கமாகப் போகிறாள்.

மீனு, பாடசாலையில் படிப்பிப்பதற்காக புத்தகங்களை மேலோட்டமாக புரட்டிக் கொண்டிருந்தாள். சித்திராவோ இன்னும் படுக்கையை விட்டு எழும்பவில்லை.

மீனு ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. பிரபல்யம் வாய்ந்த மகளிர் கல்லூரியொன்றில் தாவரவியல் பாட ஆசிரியையாக கடமையாற்றுபவள். சித்திரா 'ஏ. எல்.' வரைக்கும் படித்துவிட்டு தாய்க்கு உதவியாக இருந்து வருபவள்.

''மீனு மீனு...நேரம் ஏழு மணியாகுது. வந்து சாப்பிடன்'' பொன்னம்மாள் அடுப்படியில் இருந்து குரல் கொடுத்தாள்.

''கொஞ்சம் பொறுங்கோ வாறன்'' -சொல்லிக்கொண்டே மீனு குசினிப்பக்கமாக நடந்தாள்.

மீனு கல்வி கற்பிக்கும் பாடசாலையில் அவளது கற்பிக்கும் திறமை மாணவிகளுக்குப் பிடித்திருந்தது. அதனால் எல்லா மாணவிகளும் அவள் மேல் தனியொரு விருப்பத்தைக் கொண்டிருந்தார்கள்.

மீனு ரீச்சர்... மீனு ரீச்சர்... என்று மாணவிகள் அடிக்கடி அவளிடம்வந்து தெரியாதவற்றைக் கேட்பார்கள். அவளும் அன்புடன் அவர்களுக்கு விளக்கம் கொடுப்பாள்.

வழமையான பஸ் தரிப்பில் மீனு பஸ்சுக்காக காத்து நின்றாள். கதிரவனின் பொற்கதிர்கள் அவள் தலையில் பட்டு, மினுமினுக்கும் சில நரைமயிர்களைக் காட்டிக் கொடுத்தன. ஆமாம் இப்பொழுது அவளுக்கு முப்பத்தெட்டு வயதாகிறது. இருபத்துமூன்று வயதில் பட்டப்படிப்பை முடித்து இருபத்தைந்து வயதில் ஆசிரியையாக சேர்ந்து இப்பொழுது ஆசிரியத் தொழிலில் பதின்மூன்று வருட அனுபவமும் இருக்கிறது.

''குட்மோனிங் மிஸ்'' -தயா அவளைப் பார்த்து சிரிக்கிறாள்.

''குட்மோனிங்''.

இருவரும் பஸ் வண்டியில் ஏறிக்கொள்கின்றனர். தயா மீனுவின் வீட்டிற்குப் பக்கத்து வீட்டில்தான் இருப்பவள். மீனுவின் வகுப்பு மாணவி. தினமும் மீனுவுடன் தான்பாடசாலைக்குப் போவாள்.

தயாவின் வகுப்பறையில் மாணவிகள் கூட்டம் கூடிக் கதைத்துக் கொண்டிருந்தனர். ''முதல் பீரியெட்''க்கு ரீச்சர் வரவில்லை. அதனால்தான் அவ்வளவு சுதந்திரமாக அவர்களுக்குக்கதைக்க முடிந்தது.

மீனு அடுத்த வகுப்பில் படிப்பித்துக் கொண்டிருந்தாள். ''அடுத்த பீரியட்'' மீனு இவர்களின் வகுப்பிற்குத் தான் படிப்பிக்க வருவாள்.

''ஏண்டி மீனு ரீச்சர் இன்னும் கலியாணம் முடிக்கேல்லை. அவவுக்கு அந்த ஐடியாவே இல்லைப்போல இருக்குது'' ஒரு மாணவி வம்பளக்க கதையைக்கிளறி விடுகிறாள்.

''அதுதாண்டி இவவுக்கு முந்தி லவ் கிவ் ஏதாவது இருந்திருக்குமோ இன்னொரு மாணவி.

''நானும் சாடையாக்கேள்விப்பட்டனான் ராணி, இவ ''கம்பஸ்'' இல் படிக்கேக்க லவ் இருந்ததாம், பிறகு அந்தப் பெடியன் ஏமாத்திப் போட்டானாம்.

''ரீச்சருக்கு மூளை இல்லை. அந்தப் பெடியன் விட்டுட்டுப் போயிருந்தால் இன்னொருவரை கலியாணம் செய்து கொண்டு வாழுறதுதானே. அதைவிட்டுட்டு இப்படியே இருக்கிற யோசனை போல இருக்கு. வாழத் தெரியாதவர்கள். இன்னொருத்தி தத்துவம் கதைக்கிறாள்.

''தயா உனக்கு ரீச்சரைப் பற்றித் தெரியாதேபக்கத்து வீட்டில இருக்கிறாய் அவவோடதானே பஸ்சிலையும் யும் வாறனி'' ஒரு மாணவி தயாவைக்கேட்கிறாள்

''நான் ரீச்சரைப்பற்றி நீங்கள் கதைக்கிறது போல ஒன்றும் கேள்விப்படேல்லை. நல்லாத்தான் கேள்விப்பட்டிருக்கிறன்'' சொல்லிவிட்டுத் தலையைக் குனிந்து கொள்கிறாள்.

''உனக்கென்னடி தெரியும். ஒவ்வொரு நாளும் பஸ்சில வந்தாப்போல முந்தி நடந்தது எல்லாம் தெரியுமே?'' ஒருத்தி அவளுக்குச் சொல்கிறாள்.

படிப்பிப்பதற்காக வகுப்பறைக்குள் நுழைய வந்த மீனுவின் காதில் அவற்றில் சில கதைகள் தட்டுப்பட்டன. முன்வைத்த கால்கள் இரண்டும் பின்னோக்கி நகர்ந்தன.

சிறிது நேரம் மௌனமாக விலத்தி நின்று மாணவிகள் கதைப்பதைக்கேட்டவள், தன்னைச் சுதாகரித்துக் கொண்டு வகுப்பறைக்குள் நுழைந்தாள் மாணவிகள் எல்லோரும் ''குட்மோனிங்'' சொல்லிவிட்டு அமர்ந்தார்கள். வழமைபோல மீனு படிப்பிக்க மாணவிகள் விளங்காதவற்றை கேட்டறிந்து கொண்டார்கள்.

மதிய போசனத்திற்காக இடைவேளை விட்டிருந்தது எல்லா ஆசிரியைகளும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். மீனு மாத்திரம் சாப்பிடவில்லை. அவளால் எப்பிடிச் சாப்பிடமுடியும்?

சில ஆசிரியைகள் தன்னைப் பார்த்து விட்டு காதுக்குள் கதைப்பது எல்லாவற்றையும் இப்பொழுது அவளால் ஊகிக்க முடிந்தது. அவளுடன் படிப்பிக்கும் சக ஆசிரியைகள் ஒரு சிலர் அவளைப்பற்றிக் கதைத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் அவள் வரும்போது கதை நின்றுவிடும். அவர்கள் எல்லோரும் திருமணமானவர்கள். இப்பொழுது இவையெல்லாவற்றின் அர்த்தங்களும் மீனுவுக்குப் புரிந்தது

பாடசாலையில் படிக்கும் பிள்ளைகள் கூட எவ்வளவு தூரம் கற்பனை செய்கிறார்கள். கதைகளைச் சோடிக்கிறார்கள் என்று நினைக்கும்போது மீனுவுக்கு ஒருபக்கம் அழுகையாகவும் மறுபக்கம் ஆத்திரமாகவுமிருந்தது. இன்னும் கொஞ்சமென்றால் அவள் அழுதேயிருப்பாள்.

''உரிய காலத்தில் யாராவது ஒருவருக்குக் கழுத்தை நீட்டாவிட்டால் இப்படியெல்லாம் கதைகள் கிண்டிவிடப்படுமோ? இந்தப்பிள்ளைகளே இப்படிக் கதைத்தால் பெரியவர்கள் எப்படியெல்லாம் கதைப்பார்கள்? அவள் மனம் வருந்தியது. கதிரையில் சாய்ந்திருந்த வண்ணம் யோசித்துக் கொண்டிருந்தாள்.

''என்ன மீனு இன்னும் சாப்பிடேல்லையே'' சாப்பிட்டு முடித்த ஒரு ஆசிரியை அவளைக் கேட்கிறா.

''தலையிடிக்குது. அதுதான் லீவு எடுத்துக் கொண்டு வீட்ட போவம் எண்டு யோசிக்கிறன்''

அதுக்கேன் இவ்வளவு யோசிக்கிறீர் பிறின்சிபலுக்கு சொல்லிவிட்டுப் போமன்'' —அந்த ரீச்சர் சொல்கிறா.

நிச்சயமாய் மீனுவால் பின்னேர வகுப்புகளில் மாணவிகளுக்குப் படிப்பிக்க முடியாது. அவ்வளவு தூரம் மாணவிகளின் பேச்சுகள் அவளைத் தாக்கியிருந்தது.

மீனு பிறின்சிபலுக்குச் சொல்லி அரை நாள் லீவு வாங்கிக்கொண்டாள்.

''என்ன மீனு இண்டைக்கு நேரத்தோட வந்திட்டாய்'' பொன்னம்மாள் மகளைக் கண்டதும் அப்படிக்கேட்டாள்.

மீனு பதில் ஒன்றும் சொல்லாமல் அறைக்குள் நுழைந்தாள். மீனுவின் தங்கை சித்திரா ஏதோ வைத்துக்கொண்டிருந்தவள். ''அம்மா அக்காவுக்கு முகம் சரியில்லை. இப்ப ஏதும் கேட்டு அவவுக்கு ஆத்திரத்தைக் கிளறாதையுங்கோ'' தொடர்ந்து தைத்தாள்.

பொன்னம்மாவால் பொறுமையாக இருக்கமுடியவில்லை. அந்த சந்தோஷமான விஷயத்தை மகளுக்குச் சொல்ல வேண்டும் என்று நினைத்தவளாக அறைக்குள் போகிறாள்.

''மீனு உனக்கொரு மாப்பிள்ளையைப் பார்த்திருக்கு உன்னை விட இரண்டு வயது கூடவாம். நல்ல வேலையில் இருக்கிறதாக ஐயா சொன்னவர். நாளைக்கு உன்னைப்பார்க்க வரப்போகிறார்'' பொன்னம்மா சொல்லிக்கொண்டே போனாள். மீனு மௌனமாகவே இருந்தாள்.

பொன்னம்மாளுக்கு விஷயம் விளங்கிவிட்டது. மீனுவுக்கு ''மூட் அவுட்டானால்'' அப்படித்தான் இருப்பாள். நேரம் போகச்சரியாகிவிடும். அதனால் பொன்னம்மாள் அறையை விட்டு நடந்தாள்.

மீனு உடையை மாற்றிவிட்டு கட்டிலில் விழுந்து படுத்தாள். அவளது கண்களிலிருந்து சொட்டாக வழிந்த கண்ணீர் காதோரத்தை நனைத்து வழிந்து சென்றது.

'ஒருத்தி திருமணம் செய்யாமல் இருந்தால் சமுதாயம் எத்தனையோ வற்றையெல்லாம் கதைக்கிறதே காதலித்தவள், வாழத்தெரியாதவள், இவளுக்கு யார் மாப்பிள்ளையாகப் போகப்போகிறான் இப்படியெல்லாம்...'

சமுதாயத்தின் தேவையற்ற இழிவான பேச்சுக்களுக்குப் பலியாகிய பெண்கள் எத்தனை பேர் நான் மாத்திரம் விதிவிலக்கா? நினைத்துக்கொண்டு படுத்திருக்கிறாள்.

''அக்கா வந்து சாப்பிடன். கட்டித்தந்த சாப்பாட்டையும் திருப்பிக்கொண்டு வந்திருக்கிறாய்'' இழுத்தாள் சித்திரா.

''எனக்குத் தலையிடிக்குது. படுக்க விடு'' சொல்லிக் கொண்டு திரும்பிப்படுத்தாள் மீனு.

திலகரின் ஒரே கவலை மகளுக்கு நல்லதொரு மாப்பிள்ளை எடுக்கவேண்டும் என்பது தான். எத்தனையோ சம்பந்தங்கள் பேசி பொருத்தம் எல்லாம் சரியாகவிருந்தும் சீதனப்பிரச்சனையால் அவைகளெல்லாம் தட்டுப்பட்டுவிட்டன

சாதாரண 'கிளார்க்'காக வேலை பார்த்து ரிட்டாயராகிவிட்ட திலகரிடம் ஒரு வீடு வளவும், காசாக இரண்டு லட்சமும்தான் இருந்தது. அதைத்தான் இரு பிள்ளைகளுக்கும் அவர் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். ஆனால் திலகர் திடீரெனத் தனதுமுடிவை மாற்றிவிட்டார். வீடுவளவையும் காசையும் கொடுத்து மூத்தவளைக் கரை சேர்த்துவிட்டால் சித்திராவை பின் எப்படியாவது கரைசேர்க்கலாம் என்ற ஒரு தனி நம்பிக்கைஅவருக்கு.

அதனால்தான் விடியற்காலை போய் புரோகிதர் தம்பிமுத்து அண்ணையைப்பிடித்து சம்பந்தபேசி ''நாளை காலை மீனுவைப் பெண்பார்க்க வரப் போகிறார்கள்'' என்று பொன்னம்மாளுக்கு பெருமையாக வந்து சொன்னவர் திலகர்.

நாளைக்குத் தன்னைப் பார்க்க ஒருவர் வரவிருக்கிறார் என்ற சந்தோஷம் மீனுவுக்கு. ஆனால் அவரும் தன்னைப் பார்த்துவிட்டு பின்பு என்ன செய்வாரோ என்ற மனப் பயம் உள்ளூர இருக்கத்தான் செய்தது.

''கடவுளே எனக்கு இவரையாவது வாழ்க்கைத் துணையாகக் கொடு'' என்று வேண்டிக் கொண்டாள்.

வழமையான கற்பனைகள் அவள் மனதில் உருவெடுத்தது. நாளை தன்னைப் பார்க்க வரப் போகிறவர் எப்படி இருப்பாரோ என்ற எண்ணம் கேள்விக்குறியாக அமைந்தது. தன்னைப் பார்க்க வர விருப்பவரை கற்பனையில் அவள் உருக்கொடுத்துப் பார்த்தாள்.

'நாளைக்கு அவர் என்னைப் பார்த்து விட்டு ''ஓம்'' என்று சொல்லிவிட்டால் மற்றவர்களின் கேலிப்பேச்சுக்கள் எல்லாம் அடங்கி விடும்' அவள் மனம் உள்ளூர நினைத்துக் கொண்டது.

இரவெல்லாம் மீனுபுரண்டு, புரண்டு படுத்தாள் நித்திரை வருவதாகவில்லை. முற்றத்து மல்லிகைப் பந்தலில் பட்டுத் தெறித்தநிலவொளிக்கதிர்கள் சாரளத்தினூடே அவள் முகத்திலும் பட்டன.

அடுத்த நாட்காலை வீடு ஒரே அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது மீனு அன்று பாடசாலைக்குலீவு போட்டிருந்தாள்.



(5ம் பக்கம் பார்க்க)


## வெளிநாடு பிரயாணம்

அமெரிக்கா, கனடா செல்வதற்கான
சகல ஒழுங்குகளும்,
பிரான்ஸ், ஜெர்மனி செல்வதற்கான
சிறந்த வசதிகளும்,
குறைந்த செலவில் காலதாமதமின்றி
செய்துகொடுக்கப்படும்.

PRASAD REST,
11-Upatissa Road,
BAMBALAPITIYA.
PHONE: 587855

வ. நல்லையா,
அலவத்தை,
அளவெட்டி.

[1817]

T.C.C. குளியலறைத் தளக்கற்கள்
BATHROOM FLOOR TILES
உற்பத்தியாளர்களும் விநியோகஸ்தர்களும்

## ரெருசோ மாபிள் நிலம்

அமைப்பவர்கள்
SPECIALIST IN TERRAZZO FLOORING
மின்சார வசதி அற்ற இடங்களிலும்
ரெருசோ நிலம் அமைத்துக் கொடுக்கப்படும்
த ரெருசோ கொன்ருக்ரேஸ்
அன் கொன்சல்ரன்ஸ்

தலைமை அலுவலகம்:-
69, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

64, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(சட்டநாதர் சிவன்கோவில் அண்மை)

# தொடர் நவீனம்

ஒவ்வொரு முறையும் வீட்டுக்கு வரும்பொழுது எல்லாம் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கும்படி சிவராசா மனைவிக்கு வேண்டுகோள் விடுப்பான்.

வழமைபோல் கலாவும் ஏனோ தானோவென்று கதைகளைக் கூறி தட்டிக்கழித்து விடுவாள்.

உள்ளூர சிவராசாவுக்கு மிகவும் கவலை தான். ஆனால் தன் கவலையையோ, கோபத்தையோ கலாவிடம் வெளிப்படையாக ஒரு நாள் கூடக் காட்டிக்கொள்வதில்லை. அதை அவன் விரும்பவுமில்லை. அவனது இந்தத் தாராள மனப்பான்மையைக் கலா தனக்குச் சாதகமாக்கிக் கொண்டது இயற்கையே!

''ஏன் கலா அவர் சொல்லுறதும் நியாயம்தானே! முள்ளியவளைக்கு இடமாற்றம் எடுத்தால் இரண்டு பேருக்கும் வசதிதானே! நீ அவர் சொல்லுறபடி அப்ளிகேசனைப் போட்டு பாரன்! இப்படிப் பிடிவாதமாய் நிற்கிறியே'' என்று கலாவின் தாய் ஒருநாள் கூறினாள்.

''உங்களுக்கு எனமுறை சொல்லிப்போட்டன்! என்னுடைய அலுவல்களில் தயவு செய்து தலையிடவேண்டாம்'' - நிஷ்டூரமான பதிலால் கலாவின் தாய் மௌனமானாள்.

தன்னுடைய கோரிக்கையைக் கலா வெகு அலட்சியமாகத் தட்டிக் கழித்ததை எண்ணி சிவராசா தன் மனதினுள் குமைந்தான்.

கலாவின் அழகில் தன்னை மறந்து அழகி ஒருத்தி தன் மனைவி என்ற இறுமாப்பு வேறு அவன் மனதில் குடிகொண்டிருந்ததால் கலாவின் போக்கை அவன் மன்னித்து விடத்தான் செய்தான்.

கலா அலட்சியமாக நடந்து கொண்டாலும் கலாவின் தாய் விடுவதாக இல்லை. தினமும் நச்சரித்தபடியே இருந்தாள்.

சிவராசாவின் மனம் நோகாமல் இருக்கவேண்டும் என்று இரவு முழுவதும் புத்திமதி கூறுவாள். அடிக்க அடிக்க அம்மி நகரத்தான் செய்யும். தாயின் நச்சரிப்புத்தாங்காமல் முள்ளியவளைக்கு இடமாற்றத்துக்கு விண்ணப்பம் எழுதி பிரேமகாந்தனது சிபார்சுக்காக பைலை அனுப்பினாள்.

## 13

பிரேமகாந்தன் அவளை அழைத்தான்.

''என்ன மிஸிஸ்சிவராஜா... நீங்கள் கட்டாயம் இடமாற்றத்தில் போகத்தான் வேண்டுமா?

கலா பேசாமல் நின்றாள்.

''என்ன பேசாமல்இருக்கிறீர்...?''

''பிரேகாந்தனின் பதிலை எதிர்பார்த்த கலா ஓம் சேர், என்னுடைய மிஸ்ரர் அங்கை சாப்பாட்டுக்குச் சரியான கஷ்டப்படுகிறார். இனிப் பிரயாணக்கஷ்டம் வேறை அதுதான்நான் அப்ளை பண்ணி இருக்கிறன்''


ஓகே... ஓகே! ஆனால் நீர் எங்களை விட்டிட்டுப போகிறதை நான் விரும்பவில்லை. சரி நீர் போம் நான் றெக்கமண்ட் பண்ணி அனுப்பி விடுகிறன்!

கலா வெளியே சென்றாள்.

அவளது விண்ணப்பத்தை எடுத்தான் பிரேமகாந்தன்.

இந்த அலுவலர் மிகத் திறமையாக வேலை செய்பவர். இவர் இந்த இடத்துக்கு மிகவும் தேவைப்படும் அலுவலர். இடமாற்றத்துக்கு சிபாரிசு செய்யப்படவில்லை' என்று எழுதி லாச்சியில் வைத்து மூடினான்.

நாய் வாலை நிமிர்த்தமுடியாது என்ற உண்மை சிலரது விஷயங்களில் தெளிவாகப் புலனாகும். இடையில் சிலகாலம் கலா பிரேமகாந்தனின் நட்பை நாடாமல் ஒதுங்கி இருந்தது என்னவோ உண்மைதான்.




ஆனால் பழையபடி அவளது கனவுகள் கட்டத் தொடங்கிவிட்டது.

யாருக்காகவும் தனதுவாழ்க்கைப் போக்கை மாற்றிக் கொள்ள அவள் தயாராகவில்லை.

பிரேமகாந்தனின் நட்பை அவன் கைவிடும் மனோநிலையில் இல்லை.

மனம் குரங்காக அதன் வழியே நடக்க பழையபடி ஆரம்பித்துவிட்டாள். அவ்வளவு தூரத்துக்கு அவனது நட்பு அவளை ஆகர்ஷித்தது.

கலாவின் திருமணத்துக்குப் பின்பு பிரேமகாந்தன் தன் லீலைகளை நிறுத்திவிட்டிருந்த போதிலும் இப்ப என்ன அவசரம், ஆறுதலாய்விட்டுப்பிடிக்கலாம் என்று பொறுமையாய் இருந்தான். ஆனால் கலா, தானே வலிய வந்து பழைய நட்பைஉறுதிப்படுத்தியபின்பு, பழைய உற்சாகத்தில் தன்னை மறந்தான்.

இடைக்கிடை கடற்கரை விடுதி பிரேமகாந்தனையும் கலாவையும் அரவணைத்தது.

தான் இப்போ திருமணமானவள், கட்டிய கணவனுக்குத் துரோகம் செய்கிறேனே என்ற மனப்பயம் முற்றும் விலகியவளாய் கலா செயல்பட்டாள்.

ஒருநாள் விடுதியில் உல்லாசமாக, பிரேமகாந்தன் கலாவின் முகத்தை தன் இரு கரங்களாலும் ஏந்தியவாறு—

''என்னுடைய கலா எங்கே என்னை மறந்து விட்டாளோ என்று நான் தவித்த தவிப்புக் கடவுளுக்குத்தான் தெரியும்!'' என்று சொல்லித் தன்னுடைய செயலுக்குச் சாட்சியாக கடவுளை இழுத்தான்.

கலா தன்னை மறந்து அமர்ந்திருந்தாள்.

''கலா, ஒன்று கூறுகிறேன். ஆறுதலாக யோசித்து மறுமொழி சொல்லும். உமக்கு விருப்பமெண்டால் விவாகரத்து எடும் நான்உம்மைநிரந்தரமாக என்னுடையவளாக வைத்திருக்கிறன்.''

கலா பதில் பேசவில்லை.

கலாவின் இந்தப் போக்கு அலுவலகத்தில் மறுபடியும் வம்பர் சபைக்குப் புத்துயிர் ஊட்டியது கன்ரீனில், இவளது சமீபத்திய போக்கு ஒரு சுவாரசியமானகதையாக அடிக்கடி இடம்பெற்றது.

கோபாலுவின் வக்கிரமனம் முழுமையாகச் செயல்பட்டது: ஒவ்வொருவாரமும் தவறாமல் சிவராசாவுக்கு மொட்டைக் கடிதங்கள் எழுதி அனுப்பினான்.

கலா ஒருவரைப் பற்றியும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. தான் இப்போது திருமணமானவள் என்பதால் தன் போக்கைப்பற்றி உலகம்முன்பு போல் விமர்சிக்காது என்ற தப்பர்த்தம் கொண்டு தன் மனக்குரங்கிற்கு முழு இடத்தையும் கொடுத்துவிட்டாள்.

●

கலா மஞ்சள் நைலெக்ஸ் சேலையில் மலரெனக் காட்சியளித்தாள். தோய்ந்துவிட்டு கூந்தலை பரப்பி, நடுவில் ஒரு ஒற்றை இதழ் மல்லிகையைச் செருகி இருந்தாள்.

''என்னடி கலா, உண்மையைச் சொல்... என்ன விசேஷம்...? ஒரு வித்தியாசம் தெரியுது...? உன்னிலை... வெட்கப் படாமல் சொல்'' - மிஸிஸ் சிவசம்பு கேட்டாள்;

''என்ன ஒளிப்பு மறைப்பு இதிலை...இப்ப நாலு மாதம்''.

''என்னடி பெரிய வீரமெல்லாம் கதைத்தாய்...! இப்ப என்ன சொல்லுறாய்...?'' மிஸிஸ் சிவசம்புவின் கேலிப் புன்னகை.

''என்ன செய்யுறது! கவனமாய் இருந்தும் கணக்குப் பிழைச்சுப் போச்சு...!'' - கலா சற்று வெறுப்புடன் கூறினாள்.

''கணக்குப் பிழைக்காது! நீ கணக்கை மறந்து விட்டாய் கலா. எல்லாம் நாங்கள்நினைத்துப் பார்க்கிறமாதிரி இல்லை'' கலாவுக்கு ஆறுதலாக அமையவில்லை இப்பதில்.

தான் கர்ப்பமுற்றதை அவள் விரும்பவில்லை. சுதந்திரமான தன் வாழ்க்கைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டதே என்று கவலைப்பட்டாள்.

''இந்தச் சனியன் வேணுமென்று யார் இப்ப அழுதார்கள்?'' இப்படித்தன் மனத்தில் திட்டிக்கொள்ளுவாள் மாதம் கூடக்கூட அவளின் வனப்பு அதிகரித்தது.

சிவராசா அவளைத் தலையில் வைக்காத குறையாய் தாங்கினான்.

இப்பவெல்லாம் வீட்டுக்கு வந்தால், கூட இரண்டுநாள் லீவு போட்டு இருந்துவிட்டுத்தான் போவான். போகும் போது, மனமில்லாமல் பிரிவான்.

''கலா, கிணற்றடி வழுக்கும்! கவனமாய் நடக்க வேணும்...!''

''கலா, இரவில் வேளைக்குச் சாப்பிடும். பின்னேரங்களில் கொஞ்சத்தூரம் நடவும்...'' இப்படி மாறிமாறி கூறுவான்.

''எல்லாம் எனக்குத் தெரியும்... நீங்கள் பேசாமல் போங்கோ...'' — சிடுசிடுத்தபடியே பதில் கூறுவாள் கலா.

''பாவம்! அவளது வேதனை அவளுக்கு...!'' என்று தனக்குள் எண்ணிக் கொண்டு மௌனமாகிவிடுவான் சிவராசா.

எங்கேயோ திரிந்து திறம் குங்குமப் பூ கொஞ்சம் வாங்கிக்கொண்டு வந்து பத்திரமாகக் கொடுத்தான் சிவராசா.

●

பிரசவம் நன்றாகவே நடந்தது. ஒரு ஆண் குழந்தைக்குத் தாயாகிவிட்டாள் கலா. ரோஜா மலர் போல் செக்கச் செவேலென்று குழந்தை அழகாக இருந்தது.

கலா பூரித்துப் போனாள். குழந்தை பிறந்தது என்று கலாவின் தாய் சிவராசாவுக்ுத் தந்திமூலம் அறிவித்தாள்.

இரு வாரங்களாகியும் சிவராசா ஊருக்கு வரவில்லை.

சிவராசாவின் பெற்றோர் வந்து கலாவையும் குழந்தையையும் பார்த்துவிட்டுச் சென்றனர்.

அலுவலகத்திலிருந்து மிஸிஸ் சிவசம்பு வேறுபல பெண் ஊழியர்களுடன் வீட்டுக்கு வந்திருந்தாள். கலாவின் குழந்தைக்கெனப் புதுச்சட்டை, பவுடர், சோப் என்றுபல பரிசுப் பொருட்கள் கொண்டு வந்திருந்தனர்.

''இதென்ன ராஜேஸ் வேலை''—கலா அலுத்துக் கொண்டாள்.

மிஸிஸ் சிவசம்பு தனக்கும் இப்பவே அடிபோடுகிறு...!'' மிஸ் கதிரித்தம்பி சிரிபபுடன் கூறினாள்.

''என்ன ராஜேஸ் என்ன சங்கதி...?'' — சிரித்தபடியே கலா கேட்டாள்.

ஓ அதுவும் ஒண்டு...! அதுக்கு இன்னும் கிடக்கு காலம்...! ஏழு மாதம் கிடக்கு...!''

' அதுசரி ராஜேஸ் சுகமில்லாமல் இருக்கிற விஷயம் மிஸ் கதிரித்தம்பிக்கு என்ன மாதிரித் தெரியும்? அதைக் கேளும் கலா...''— சித்திராங்கி சிரித்தபடியே கலாவை எதிர் நோக்கினாள்.

மிஸிஸ் சிவசம்புவுக்கு இந்த விஷயங்களை சொல்லாமல் விட்டால் தலைவெடித்துவிடுமெண்டு உங்களுக்குத் தெரியாதே...''— கலா கூற ஓரே சிரிப்பலைகள் எழுந்து மறைந்தன.

முப்பத்து ஒன்றும் நாள் துடக்கு கழிவு என்னும் சடங்கு நடந்து முடிந்தது. சிவராசா வரவில்லை.

வாழ்க்கையில்முதன்முதலில் கலாவுக்குநெஞ்சு துணுக்கென்றது! ஒரு வெறுமையைத் தனிமையை உணரலானாள்.

(தொடரும்)

# சிறுகதை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சித்திரா ஓடியாடி வேலைகளைச் செய்துகொண்டிருந்தாள்.

''அக்கா இண்டைக்கு மாப்பிள்ளை உன்னைப் பார்த்த உடனேயே மயங்கப்போறார். பிறகு அடுத்தமாதம் கலியாணம் தானே'' சிரித்தவாறு சொன்னாள்.

மீனுவுக்கு உள்ளூர சந்தோசமாக இருந்தது. ஆனால் அவள் அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

காலை பத்து மணியளவில் மீனுவைப் பார்க்க அந்த இளைஞன் பெற்றோருடன் வந்திருந்தான். இரு பக்கத்தினரும் கதைத்து முடித்தாயிற்று. சித்திரா ஓடியாடி உபசரிப்புகளையும் பரிமாற்றங்களையும் செய்தாள். சித்திராவே மீனுவையும் கூட்டி வந்து காட்டினாள். பின்னேரம் முடிவைச் சொல்லி அனுப்புவதாகச் சொல்லிவிட்டுப் போய் விட்டனர்.

அன்று மாலை மாப்பிள்ளையின் பெற்றோருடன் வந்தவர்களில் ஒருவர் வந்தார். திலகரும், பொன்னம்மாளும் வரவேற்றனர்.

மீனுவுக்கு நெஞ்சு படக் படக்கென்று அடித்துக் கொண்டது. காரணம் மீனுவுக்கு அந்த இளைஞனை நன்றாகப் பிடித்திருந்தது. வாழ்க்கையிலே ஒரு முக்கிய அம்சத்தின் முடிவை நிர்ணயிக்கும் நேரம் அதுவாயிற்றே அதனால் மீனு அறையின் கதவோரமாக வந்து நின்று கொண்டாள் அறைச்சீலை அவளை மறைத்துக் கொண்டிருந்தது. வந்திருந்தவர் எப்படிப்பேச்சை தொடங்குவது என்று அவதிப்பட்டார் ஒருவாறு உங்கட இரண்டாவது மகள் என்ன செய்கிறு?'' அவர் கேட்டார்.

ஏ. எல். படிச்சுப்போட்டு வீட்டிலதான் இருக்கிறு. மூத்தவவுண்ட விஷயம் சரியென்றால்... ... அடுத்து இரண்டாவதுக்கு யாரையாவது பார்த்துக்கட்டிவைக்கலாம்'' திலகர் இழுத்தார்.

''அவருக்கு உங்கட இரண்டாவது மகளைச் செய்ய விருப்பமாம் சீதனம் ஒன்றும் தேவையில்லையாம்'' வந்திருந்தவர் சொன்னார்.

திலகருக்கு தலையில் ஏதோ பெரிய பாறுங்கல்லைத் தூக்கிப் போட்டது போலிருந்தது. பொன்னம்மாளும் அதிர்ச்சியடைந்து போனாள்.

அதெப்படி மூத்தவவைப் பார்க்க வந்திட்டு இரண்டாவது ஆள்தான் வேணுமென்று கேட்கிறது.''

வந்திருந்தவர் பதில்ஒன்றும் சொல்லவில்லை.

''மூத்தவளுக்குத்தான் நாங்கள் கலியாணம் பேசினனாங்கள். இரண்டாவதிற்கு இன்னும் நாளிருக்குது''- பொன்னம்மாள் சொன்னாள்.

''தம்பிக்கு ஏதோ பார்க்க வந்த இடத்தில ரண்டாவதை பிடிச்சுப்போச்சுது எல்லாம் அவரவர்களின்ட மனவிருப்பம் தானே; நான் என்ன செய்யிறது. வந்தவர் சொன்னார்.

அப்பொழுது மீனு வெளியே வந்தாள். அவளது பார்வை திலகர், பொன்னம்மாள், சித்திரா மூவர் மீதும் விழுந்தது. அந்தப்பார்வையில் அறியமுடியாத பல அர்த்தங்கள் புதைந்திருந்தன.

அவர் சித்திராவை முடிக்கட்டும். எங்கட வீட்டிலை அதற்கு விருப்பம் என்று போய்ச்சொல்லுங்கோ'' மீனு சொன்னாள்.

''அக்கா நான் மாட்டன். நீ முடிக்காமல் நான் கடைசி வரைக்கும் கலியாணம் முடிக்க மாட்டன்'' சித்திரா சத்தமிட்டுச் சொன்னாள்.

''சித்திரா'' என்று அதட்டலாக மீனு சொன்னதும் அவள் மௌனமாகி விட்டாள். திலகரும் பொன்னம்மாளும் ஊமைகளாக அமர்ந்திருந்தனர்.

''சித்திரா நீயாவது தாலி கட்டிக் கணவனோடு சந்தோஷமாக வாழ்வதை நான் பார்க்க வேணும்'' மீனு சொன்னாள். சித்திரா விக்கிவிக்கி அழுதாள்.

(8-ம் பக்கம் பார்க்க)

# கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்கோமே

மாசி மாதத்தில் ஒரு நாள் வைகறைப் பொழுதிலே இரண்டு புலவர்கள் மாணக்கர்களோடு காவிரிக் கரைக்குச் சென்று கொண்டிருந்தனர். பனிப்படலம் எங்கும் புகையாகச் சூழ்ந்து கவிந்திருந்தது. யாவரும் குளிர் நடுக்கத்தால் கொடுகிக் கொண்டிருந்தனர்.

''பனிக்காலம் தீது'' என்றார் ஒருபுலவர். ''ஆம் பனிக்காலம் நன்று'' என்றார் மற்றப்புலவர். இருவரும் சிரித்துக் கொண்டே ஒத்த கருத்துடையராய் நீராடிவிட்டு வீடு திரும்பினர். மாணவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு புலவர் தீது என்றதை மற்றவர் நன்று என்று மறுத்தது. அவர்களுள் மாறுபாடு இல்லாது எவ்வாறு ஒத்துப்போய் விட்டனர் என்று பலவாறாகப் பேச்சு நடந்தது. அதையறிந்து நன்று என்று கூறிய புலவரே விளக்கத்தொடங்கினர். அவர் பனிக்காலம் தீது என்றதை உடன்பட்டே நானும் பனிக்காலம் நன்று என்றேன். பனிக்காலத்தை நன்று என்று சொல்லவில்லை. பனிக்கு ஆலம் நன்று என்றேன். அதன் கருத்து யாது எனில் ஆலகாலம் கொடியதுதான். ஆனால் அதைவிட மிகக்கொடியது பனி, பனியின் கொடுமையை நோக்க ஆலகாலம் மிக நல்லதாகி விடுகிறது, அவ்வளவு தீமையை உடையது பனிக்காலம்.'' என்று விளக்கினார். சீடர்கள் புலவரின் சிலேடைத்திறனை மெச்சிப் பாராட்டினர். ''தைப்பனி தரையைத் துளைக்கும். மாசிப்பனி மச்சைத்துளைக்கும் என்று சொல்வதுண்டு இவ்வாறு பனியில் நடுங்குபவர்கள் சிவராத்திரி எப்பொழுது வரும் என்று காத்திருப்பார்கள். ஏனெனில் சிவராத்திரிக்குப் பின் பனியெல்லாம் பறந்து போய் விடும். அந்தப் பனித்தொல்லையின்றி நம்மைக் காத்தருள வேண்டியே பரமசிவனை நாம் பக்தியோடு பரவியேத்த வாய்த்தது போன்றமைந்தது சிவராத்திரி பூசை. மகாசிவராத்திரிப் புண்ணிய காலம் யாதெனில் மாசித் திங்களின் தேய்மதிப் பக்கம் பதினாலாம் நாள் இரவு பதினான்கு நாளிகையளவாகும்.

(மாசி மாதம் கிருஷ்ணபக்ஷம் சதுர்தசி இரவு).

சிவராத்திரி சிவபூசை வழிபாடு நடத்துவதற்கும், சிவதீட்சை ஏற்றுச் சிவலிங்கவழிபாடு செய்வதற்கும் ஒருசிறந்த நன்னாள். இறை வழிபாட்டிற்குத் தடையாயிருப்பன ஊணும், உறக்கமும் ஆகும். அத் தடைகளை நீக்குவதற்குப் பல பயிற்சிகளை நாம் கையாண்டுவருகிறோம் குறித்த பல நாட்களில் நாம் பட்டினி நோன்பிருந்து ஊணைத்துறக்கிறோம். அதுபோல் உறக்கத்தைத் துறப்பதற்குச் சிவராத்திரி உகந்த நாளாய் எமக்குக் கிடைத்திருக்கிறது. கண்ணைத் துயின்றவமே காலத்தைபோக்காமல் கண்ணுக்கினிய கண்ணுதற் கடவுளைக் கைதொழுதேத்த நண்ணிவருகிறது நல்ல சிவராத்திரி நாள் வைணவர்கள் வைகுண்ட ஏகாதசியன்று பசித்திருந்து இரவுவிழித்திருக்கிறார்கள் சைவர்கள் சிவராத்திரியன்று நோன்பு விரதம் கொண்டு விழித்திருந்து பரமனைப் பயில்கிறார்கள்.

**சிவன் சம்பந்தமான சிவராத்திரி விரதமும், சக்தி சம்பந்தமான நவராத்திரி விரதமும் இந்துக்கள் கொண்டாடும் பெருவிரதங்களாகும். சிவராத்திரியின் தத்துவம், புராணவரலாறு, அதன் பயன் பற்றி முன்னைநாள் அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சித்துறைப் பேராசிரியர் ஜி. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் இலக்கியத்துடன் இனியநடையில் எழுதியுள்ள கட்டுரை இன்று சிவராத்திரிதினத்தை யொட்டி இங்கு வெளியிடப்படுகிறது.**

அறிந்தோ அறியாமலோ கூட, ஒருவன் சிவராத்திரியன்றுவிழித்திருந்தால் புண்ணியம் கிட்டிவிடும். ஒருவேடனைப் புலியொன்று காட்டில் விரட்டிச் சென்றது. உயிர் பிழைக்க வேண்டி அவன் ஓடிப்போய் ஒரு வில்வ மரத்தில் ஏறிக் கொண்டான் புலியும் அவனை விட்டுப்போகாமல் மரத்தடியிலே பதுங்கிக்கிடந்தது. புலிக்குப் பயந்து கிலி பிடித்துப் போய் இரவு முழுதும் அவன் உறங்கவே இல்லை. இன்னது செய்கிறோம் என்று அறியாமலே இராப் பொழுதைப் போக்கவேண்டி அவன் அம் மரத்து இலையை ஒவ்வொன்றுக் கிள்ளிக் கீழே போட்டுக் கொண்டிருந்தான். அன்று சிவராத்திரி நாள் என்று அவனுக்குத் தெரியாது. காலையில் புலியிருந்தஇடத்திலே ஒரு சிவலிங்கம் காட்சியளித்தது. வேடன் கிள்ளியெறிந்த வில்வபத்திரமெல்லாம் சிவலிங்க அருச்சனையாக முடிந்தது. வேடன் செய்தது அறியாமற் செய்ததாய் இருந்தாலும் அவன் செய்தது வில்வத்தளத்தின் அருச்சனையாதலாலும், அவன் விழித்திருந்து தூவிக்கொண்டிருந்தமையாலும் அவ்வருச்சனை சிவலிங்க வழிபாடாக வாய்த்ததாலும் அன்று ஏற்கனவே சிவராத்திரியாக இருந்ததாலும் அவன் முத்தி பெற்றான். இதுநிகழ்ந்த இடம் திருவைகாவூர் என்னும் புனிதத் தலமாகும். அங்கு இன்றும் சிவராத்திரி பூசைக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு.

சுகுமாரன் என்பவன் ஒரு வேதியன் அவன் பிறனில் விழைதல் முதலிய தீய காமச் செயல்களும் வழிப்பறியடித்தல் முதலிய பாதகச் செயல்களும் பலபுரிந்தவன் அவன் தற்செயலாக ஒரு சிவராத்திரியன்று நாக கன்னியர் நடத்தும்சிவராத்திரி வழிபாட்டைக் கண்ணுற்றான். அது பெருஞ் சிவபுண்ணியமாக மாறிக் காலதூதர் கையினின்றும் சிவகணங்களால் மீட்கப்பட்டான் என்று புராணங்கள் கூறுகின்றன. ஆதலால் சிவராத்திரி பூசையைக் கோயில்களிற் கண்டு சேவித்தல் பெரும் புண்ணியமாகும். சிவராத்திரி விழிப்பிருக்க வேண்டியதுதானே முக்கியம் என்று நினைத்துச் சிலர் திரைப்படங்களுக்கும் நாடகக் கொட்டகைகளுக்கும் சென்று அப்படியும் இப்படியுமாய் அவ்விராப் பொழுதைக் கழித்து விடுகிறார்கள். சிவராத்திரியின் போது தூங்காமல் இருந்தால் புண்ணியம் உண்டு என்பது சரிதான். ஆனால் சிவராத்திரியின் நோக்கம் அதுவல்ல. சிவராத்திரி நாள் இரவில் நான்கு சாமத்திலும் சிவலிங்க வழிபாடுகளைத் தரிசித்தும் நாம் வழிபாடு நடத்தியும் சிவபெருமானைச் சிந்தித்திருந்து நற்பேறு பெறவேண்டும் என்பதே உண்மை. சிவராத்திரியன்று சிவன் கோயில்களில் எல்லாம் நான்கு சாமமும் பூசைநடக்கும். அப்பூசைகளைக் கண்டும் நடத்தியும் தானதருமங்கள் செய்தும், சிவபெருமானின் பொருள்சேர் புகழைப் புகன்றும்புகலக்கேட்டும் சிவபுண்ணியம் அடையலாம்.

இருட்டிலே நல்லவையெல்லாம் நடுங்கி நலிவுறும் தீயவையெல்லாம் திளைத்துத் திரிவுறும். புறத்துள்ள இருளே நம்மை அச்சுறுத்தி அல்லற்படுத்துமானால் அகத்திலுள்ள இருளின் கொடுமையைப் பற்றிக் கூறவே வேண்டாம். நம் அறியாமை, அஞ்ஞானம், மருள், மயக்கம் எனும் இவையும் கொடிய இருளேயாகும் இருளைப் போக்கி ஒளியைக் கொடுப்பதற்கும் அறியாமையைப் போக்கிச் சிவஞானச் செல்வத்தை அளிப்பதற்கும் சிவன் ஒருவனே வல்லவன். அவனை வழிபட்டு அவன் திருவருளின் திறத்தாலேயே நாம் நம் அகவிருளைப் போக்கும் சிவஞான தெளிவைப் பெறுதல் கூடும். சிவனே ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதி அவனே தனிப் பெருங் கருணைவடிவான அருட் பெருஞ் சோதி அவனே அருள் ஒளி அண்டமாரிருளுக்கு கடந்தும்பர் உண்டாயிருக்கிற ஒண்பொருளே சிவப்பொருள் என்று வேதங்களும் சிறந்த சிவாகமங்களும் கூறுகின்றன. ஆகவே அவனுடைய அருவுருவ விளக்கமாகிய சிவலிங்கத்தைச் சிவராத்திரி யன்று வழிபடுதல் சிறப்பாயிற்று. சிவபெருமான் இலிங்க வுருவிலே சென்று தங்கி வழிபாடுகளை ஏற்றுக் கொண்ட சில முக்கிய நிகழ்ச்சிகள் உள்ளன. அப் புண்ணிய காலத்தை இலிங்கோற்பவ காலம் என்று கூறுவர். உற்பவம் என்றால் தோற்றம் சிவன் பல தடவைகளில் இலிங்க வடிவிலே இலங்கி யிருந்தான். ஆனால் அவ்வாறு இலங்கிய காலமெல்லாம் மகாசிவராத்திரிக் காலமாகவே அமைந்தன. ஆதலால் சிவராத்திரி இலிங்கோற்பவ புண்ணிய காலம் என்று வழங்கப்படும்.

## எண் சுவைகள்

சுவைகள் எட்டு என்று தொல்காப்பியம் கூறுகிறது. அவையாவன; நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்பனவாம்.

## நினைவில் நிறைந்த அரசியலார் சிலர் – 9

# சிங்களம் மட்டும் சட்டம்: ஜி. ஜி. ஆட்சேபம்

1956-ஆம் ஆண்டுஜூன் மாதம் ஐந்தாம் தேதி.

சிங்களம் மட்டும் மசோதாவை எஸ். டபிள்யு ஆர் டி. பண்டாரநாயகா பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தநாள்.

அன்று காலை எட்டரை மணியளவில் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் பாராளுமன்றத்துக்கு முன்பாக காலிமுகத்திடலில் சிங்களம் மட்டும் மசோதாவை எதிர்த்துச் சத்தியாக்கிரகம் செய்ய ஆரம்பித்தனர்.

இதற்கு எதிராகக் குண்டர்கள் கூட்டம் அங்கு திரண்டு சத்தியாக்கிரகிகளைக் கேலியும் கிண்டலும் செய்தது. பின்னர் சத்தியாக்கிரகிகள் மீது தாக்குதல் நடத்தியது.

பலர் காயமடைந்தனர். காலிபேஸ் திடலில் சத்தியாக்கிரகிகள் பலர் இரத்தம் சிந்தினர். பொலிசார் இவற்றை அமைதியாகப் பார்த்துக் கொண்டு நின்றனர்.

சத்தியாக்கிரகிகளோடு திரு. ஜி. ஜி.பொன்னம்பலமும் திரு. செ. சுந்தரலிங்கமும் சென்று அமர்ந்து சிறிதுநேரம் அளாவளாவினர்.

இச்சமயத்தில்தான் குண்டர்கள் கூச்சலிட்டுக் கேலி செய்தனர். அவர்களைப் பார்த்து திரு.சுந்தரலிங்கம் பதிலுக்குப் பதில் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தார். ''அவர்களைப் பொருட்படுத்தாமலிருங்கள்'' என்று ஜி.ஜி. சுந்தரலிங்கரைக்கேட்டுக் கொண்டார்.

சத்தியாக்கிரகிகள்மீது ஆரம்பித்த தாக்குதல் பிற்பகலில் கொழும்பு நகரில் தமிழ்ப் பொதுமக்கள் மீதும் கைவைக்க வழி வகுத்தது. பல கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன; தீ வைக்கப்பட்டன.

அன்று பிற்பகல் இரண்டு மணிக்குப் பாராளுமன்றம் கூடியது. சிங்களம் மட்டும் மசோதா கொண்டு வரப்படும் அத்தினம் சிங்கள மக்களுக்குப் பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியிருந்தது.

தமிழரசுக்கட்சியினர் அன்றையதினம் பாராளுமன்றக் கட்டிடப்படிகளில் சத்தியாக்கிரகம் செய்யப் போவதாக சபாநாயகருக்கும் பிரதமருக்கும் ஏற்கனவே அறிவித்திருந்தனர்.

இது ஒரு சதித்திட்டமென்றும் பாராளுமன்றத்துக்குள் நுழைந்து இவர்கள் குழப்பம் செய்யவிருப்பதாகவும் முன்னதாகவே வதந்தி கிளம்பியிருந்தது.

முதல்நாள் நான்காம் திகதி பிரதமர் பண்டாரநாயக்கா வானொலி மூலம் நாட்டுமக்களுக்கு ஒரு செய்தியும் விடுத்திருந்தார். தமிழரசுக்கட்சியின் உத்தேச சத்தியாக்கிரகம் பற்றியும் இதனால் பாராளுமன்றக் கட்டிடத்துள் பார்வையாளர் எவரும் அனுமதிக்காத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது பற்றியும் பிரதமர் தமது செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

இதன் விளைவுகளால் ஐந்தாம் தேதி கொழும்பில் பதற்றம் நிலவியது.

அன்று பிற்பகல் இரண்டு மணிக்குப் பாராளுமன்றம்கூடியதும் பார்வையாளர்களை அனுமதிக்க மறுத்திருப்பதுபற்றியும் பாராளுமன்றக்கட்டிடத்தைச் சுற்றிப் பலத்த காவல் ஏற்பாடுகள் செய்திருப்பது பற்றியும் சபாநாயகர் ஜனாப் எச்.எஸ்.இஸ்மாயில் அறிவித்தார்.

கேள்வி நேரத்தின் பின் பிரதமமந்திரியும் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சருமான திரு எஸ். டபிள்யு ஆர்.டி. பண்டாரநாயகா சிங்களம் மட்டும் மசோதாவைச் சபையில் சமர்ப்பித்தார்.

### ஜி.ஜி. கிளப்பிய ஆட்சேபனை

மசோதாவைப்பிரதமர்சபையில் சமர்ப்பித்துவிட்டு அமர்ந்ததும் திரு ஜி.ஜி பொன்னம்பலம் எழுந்தார்.

''கௌரவபிரதமமந்திரி இப்போது சபையில் சமர்ப்பித்த மசோதா இரண்டாவது வாசிப்புக்கு விடப்படுமுன்னர் அரசியலமைப்பு அதிகாரம் பற்றிக் கிளப்ப, நான் உத்தேசித்துள்ளேன். 1946-ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் 29-வதுஷரத்துக்கு இந்த மசோதா முரணானது என்பது எனது கருத்தாகும்'' என்று திரு.ஜி.ஜி. தமது ஆட்சேபனையை ஆரம்பித்தார்.

இச்சமயம் குறுக்கிட்ட பிரதமர் பண்டாரநாயகா ''இந்தப் பிரச்சனையைக் கிளப்புவதற்கு இதுதானா பொருத்தமான நேரம்?'' என்று கேட்டார்.

''இதே கேள்வியை நான் எனக்குள்ளேயே கேட்டு இதுதான் மிகப் பொருத்தமான நேரம் என்ற முடிவுக்கு வந்து இப்பிரச்சனையை எழுப்புகிறேன்'' என்று கூறி ஜி ஜி. தமது ஆட்சேபனையைத் தொடர்ந்து சமர்ப்பித்தார்.

இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கிய 1946-ஆம் ஆண்டின் அரசியலமைப்பில் 29வது ஷரத்தின் உபபிரிவுகளை எடுத்து விளக்கி இவற்றுக்கு முரணான முறையிலேயே சிங்களம் மட்டும் மசோதா கொண்டு வரப்பட்டுள்ளதென்று ஜி. ஜி வாதாடினார்.

29வது ஷரத்திற்கு முரணாகவே இந்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளதென்று சபாநாயகர் தமது தீர்ப்பைத் தெரிவிக்க வேண்டுமென திரு ஜி.ஜி. கேட்டுக்கொண்டார்.

ஜி. ஜி. கிளப்பிய ஆட்சேபனையை அடியொற்றி வவுனியா எம்.பி திரு ஸி. சுந்தலிலிங்கமும் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கமும் பேசியபின் பிரதமமந்திரி பதிலளித்த பின், சபாநாயகர் தமது தீர்ப்பை வழங்கினார். இதன்பின் இம் மசோதாவின் இரண்டாம் வாசிப்பு எப்பொழுது என்று சபாநாயகர் கேட்டதும் ''மறுநாள்'' என்று பிரதமர் பதிலளிக்கவே திரு. ஜி. ஜி. மீண்டும் எழுந்து நாளை இம்மசோதாவின் இரண்டாம் வாசிப்பு இடம்பெறவிருப்பதால்தாம் ஒரு திருத்தம் கொண்டுவருவதற்கு அனுமதி தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மசோதாவின் இரண்டாம் வாசிப்பு சபையில் எடுக்கப்பட்டதும் தாம் தமது திருத்தத்தைப் பிரேரிக்கப்போவதாகவும் திரு. ஜி. ஜி. தெரிவித்தார்.

(ஆதாரம் ஹன்சார்ட் 5-6-56)

(மிகுதி அடுத்தவாரம்)

**எஸ். எம். ஜி.**

## பாடசாலை தனியார் பஸ்சேவை ஆரம்பநாள்

**எதிர்வரும் 20-2-85 புதன்கிழமை**

அன்றுகாலை 7-15 அளவில் பலாலிவீதி திருநெல்வேலிச் சந்தியில் இருந்துமேற்படி சேவை ஆரம்பமாகும்.
விபரங்கட்கு:-

'அம்பிகா பவனம்' பலாலி வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
போன்: 24255. 1887

## மரண அறிவித்தல்

### பேராசிரியர் செ. சுந்தரலிங்கம்



முன்னுள் கணிதப்பேராசிரியரும். வவுனியாத்தொகுதி எம். பியும்,அமைச்சருமான செல்லப்பா சுந்தரலிங்கம் காலமானுர். இவர்காலஞ்சென்ற திரு. சுப்பிரமணியம் செல்லப்பா, திருமதி. மீனுட்சி செல்லப்பா ஆகியோரின் மகனும், கனகாம்பிகையின் அன்புக்கணவரும், டாக்டர் ஞானலிங்கம், லிங்காம்பிகை (லிங்கா), லிங்கவதி (வதா), சத்தியலிங்கம், லிங்கமணி (மணி), லிங்கேஸ்வரி (ஈசா) ஆ யோரின் அன்புத்தந்தையும், புஷ்பலக்ஷ்மி, கே. சச்சிதானந்தா, காலஞ்சென்ற கே. செல்வதுரை (டியூக்), நீலாம்பிகை, ஆர் சி ராஜராயன், எம். பசுபதி ஆகியோரின் அன்புமாமனுரும், காலஞ்சென்ற டாக்டர் செ. பஞ்சலிங்கம், காலஞ்சென்ற நீதியரசர் செ நாகலிங்கம், காலஞ்சென்ற செ. தியாகலிங்கம் கியூ ஸி , டாக்டர் செ. அமிர்தலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரனுமாவார் அன்னுரின் ஈமக்கிரியைகள் 17ந் திகதி ஞாயிற்றுக்கிழமை (இன்று) காலை வவுனியா கண்டி வீதியிலுள்ள 'ஹரன்வாசா' லிங்கம் தோட்டத்தில் இடம்பெறும். காலை 9 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக திருலிங்கப்கமம், நாவற்குளத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 1875

## கேள்வுப் பத்திரம்

**சுண்ணும்புக்கல் 'குவாறியில்' இருந்து கல்நொருக்கி இயந்திரத்திற்கு (கிறசர்) ''ரிப்பர் லொறிகளில்'' ஏற்றிப் பறித்தல்**

கீரிமலைக்கருகிலுள்ள கலட்டியில் அமைந்துள்ள எமது குவாறியில் இருந்து தொழிற்சாலையில் உள்ள கல்நொருக்கி இயந்திரத்திற்கு (கிறசர்) ''ரிப்பர் லொறிகளில்'' சுண்ணும்புக் கற்களை கொண்டு செல்வதற்கான கேள்வுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன கொண்டு செல்லப்பட வேண்டிய தூரம் அண்ணளவாக 1½ கிலோமீற்றர்

கேள்வுப்பத்திரங்கள் கீழ் குறிப்பிட்டவாறு ஒப்பந்தக்காரரால் தயாரிக்கப்பட்டு 1985 - 02 - 18 ம் திகதி திங்கட்கிழமை காலை 10-30 மணிக்கு முன் 'உதவிப் பொது முகாமையாளர்' காரியாலயத்தில் உள்ள கேள்வுப்பத்திரப் பெட்டியில் (Tender Box) சேர்க்கும்படி கேட்டுககொள்ளப்படுகின்றது.

பொதுமுகாமையாளர்,
லங்கா சீமெந்து லிமிட்டெட்,
காங்கேசன்துறை.

### மாதிரி கேள்வுப் பத்திரம்

கேள்வுப்பத்திர இல: எல். சி எல்/ கே/ ரி/ 01 /85

1. ஒப்பந்தக்காரரின் பெயர்:
2. விலாசம்:-
3. ஒரு தொன் சுண்ணும்புக்கல் ''குவாறியில்'' இருந்து ''கிறசருக்கு'' கொண்டு செல்வதற்கான கூலி:- ரூபா சதம் / தொன் ஒன்றுக்கு
4. உபயோகிக்கப்படும் 'ரிப்பர்' 'லொறிகளின்' பதிவு இலக்கங்களும், கொள்ளளவுகளும.

| பதிவு இலக்கம் | கொள்ளளவு தொன்னில் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

மேற்படி ''ரிப்பர் லொறிகள்'' பொதுமுகாமையாளராலோ அல்லது அவரது பிரதிநிதிகளாலோ அறிவிக்கப்பட்ட குறித்த நேரத்தில் வேலைக்கு உபயோகிக்க அனுப்புவேன் என்பதனையும் மேல் குறிப்பிட்ட தொன் ஒன்றுக்கான விலைக்கூற்றிற்கு வேலை செய்ய சம்மதிக்கிறேன் என்பதனையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்

1854 ஒப்பந்தக்காரரின் கையொப்பம்.

விளம்பரம்

## வெற்றுச்சாக்கு விற்பனை

எமது சங்கத்தில் சுமார் 4000 வெற்றுச்சாக்குகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனையாக உள்ளது. இவற்றிற்கான விண்ணப்பங்கள் யாவும்சங்கத்தில் ரூ 2/- செலுத்திப்பெற்ற விண்ணப்ப படிவங்களில் முத்திரை இடப்பட்ட உறைகளில் வைத்து 22-2-85 வெள்ளிக்கிழமை பி ப. 3-00 மணிக்கு முன்பாக சங்க காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேம். கடிதஉறையின் இடதுபக்க மேல் மூலையில் வெற்றுச்சாக்கிற்கான கேள்விப் பத்திரம் எனக் குறிப்பிடவும்.

கேள்விப்பத்திர பணவைப்பு ரூபா 500/-

பதில் பொதுமுகாமையாளர்
அளவெட்டி-மல்லாகம்
1873 ப. நோ. கூ. சங்கம்.


லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
36 Chamber of Sholine (KaratteFilm)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30. 2-30 P.m
GREEN ICE
(Adults)

றீகல் மினி
தினசரி 10-15, 1-30
எம்.ஜி.ஆர்.சரோஜாதேவி
தாய் சொல்லைத் தட்டாதே

றீகல்
தினசரி 10-30, 2 00
AN OFFICER AND A GENTLEMAN
கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்


## வெளிப்படுத்தின விசேஷ புத்தகம்

உங்களுக்குத் தேவையானதும், நீங்கள் அறிந்துகொள்ளவேண்டியதுமான யாவற்றையும் சொல்லுகிற ஒரே வேதப் புத்தகம் இதுவே.

ஆகவே

வாருங்கள்! வந்து ஒரு மாதத்தில் கற்றுக்கொண்டு உலகில் இனி நடக்க இருக்கும் சம்பவங்களை அறிந்து எச்சரிக்கையாய் இருங்கள்.

திகதி: செவ்வாய் 19-ம் திகதி முதல் ஒவ்வொரு கிழமையும் செவ்வாய் – புதன் – வியாழன் வெள்ளி ஆகிய நாட்களில் 4 கிழமைகளுக்கு நடைபெறும்.

நேரம்: 3—4-30 மணிவரை.

இடம்: 241, பருத்தித்துறை வீதி, (முத்திரைச் சந்தி) நல்லூர்.

தொலைபேசி: 22458

இயேசு
வெகு விரைவில் வருகிறர்
1791

## பிரதேச அபிவிருத்தி அமைச்சு

### சுவாமிவிபுலானந்தர் இசைநடனக் கல்லூரி

(மட்டக்களப்பு)

# ஆசிரிய பதவிகளுக்கான வெற்றிடங்கள்

| | |
|---|---|
| நடன ஆசிரியர் | – பரத நாட்டியம் |
| கருநாடக இசை ஆசிரியர் | – வாய்ப்பாட்டு |
| கருநாடக இசை ஆசிரியர் | – வீணை |
| கருநாடக இசை ஆசிரியர் | – வயலின் |
| கருநாடக இசை ஆசிரியர் | – புல்லாங்குழல் |
| கருநாடக இசை ஆசிரியர் | – மிருதங்கம் |

இந்து திராவிட பண்பாட்டு ஆசிரியர்

விண்ணப்பப் பத்திரங்கள் சேரவேண்டிய கடைசி நாள்

**28-02- 985**

விண்ணப்பப் பத்திரங்கள் அனுப்பவேண்டிய முகவரி:–

செயலாளர்
பிரதேச அபிவிருத்தி அமைச்சு,
த. பெ. இல: 1700,
244, காலி வீதி,
கொழும்பு 4.

மேலும் விபரங்களுக்கும் மாதிரி விண்ணப்பப் படிவத்துக்கும் 1985–02–01 ஆம் திகதி அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

குறிப்பு:– வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள இசை-நடன ஆசிரியருக்கான சம்பள அளவுத் திட்டத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

ம. இராமலிங்கம்,
பிரதேச அபிவிருத்தி அமைச்சுச் செயலாளர்,
244, காலி வீதி,
கொழும்பு–4 1879

## குருநகர்வங்கி ஊழியர்களுக்கு
# ஆபத்து ஏற்படில் நஷ்டஈடு!
### வங்கி மேலிடத்திடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''குருநகர் வங்கிகளில் கடமையாற்றும்போது உயிருக்கோ அல்லது உடலுக்கோ ஆபத்து ஏற்பட்டால் அதற்கான நஷ்டஈடு வழங்கவேண்டுமென்று வழங்கி ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்''

குருநகரிலுள்ள வங்கிகளில் கடமையாற்றும் ஊழியர்களின் கூட்டம் சில தினங்களுக்குமுன் நடந்தபோது மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

குருநகரில் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின்போது வங்கிக்குக் காசு கட்ட வந்த ஒருவர் காயமடைந்தார் வங்கிக்குள் சில சன்னங்கள் சென்றதாகவும் கூறப்படுகிறது.

குருநகர் வங்கிகளில் கடமையாற்ற ஊழியர்களைக் கட்டாயப்படுத்தக்கூடாதென்றும், அவர்கள் தாமாகவே விரும்பிச்செல்லவேண்டும் என்ற நடைமுறை தொடர்ந்து இருக்கவேண்டுமென்றும் இக்கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது

இச்சம்பவத்தைத் தொடர்ந்து கடந் 3 தினங்களாக வங்கி ஊழியர்கள் வேலை செய்யவில்லை. பதற்றநிலை காரணமாக மக்களும் குருநகர் வங்கிகளுக்குச் செல்லவில்லை.

ஹட்டன் நாஷனல் வங்கிக் கிளை ஒன்று இம்மாதம் 11-ம் திகதி குருநகரில் ஆரம்பிக்கப்படுமென்றும், அறிவிக்கப்பட்டிருந்தது தற்போதுள்ள பதற்றநிலை காரணமாக இக்கிளை இன்னும் செயல்பட ஆரம்பிக்கவில்லை.

வங்கி ஊழியரின் கோரிக்கை பற்றி பேலிடம் ஆலோசித்து வருவதாகவும், பேச்சுவார்த்தை நடைபெற்றுவருவதாகவும் தெரியவருகிறது. (க)

## தேங்கிக் கிடக்கும் நூல்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாடு அரசாங்கத்தால் யாழ் பொதுசன நூலகத்திற்கென அனுப்பிவைக்கப்பட்ட பலநூற்றுக்கணக்கான புத்தகங்கள் கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவராலயத்தில் தேங்கிக் கிடக்கின்றனவாம். 83 ஏப்ரலில் அனுப்பிவைக்கப்பட்ட இப் புத்தகங்கள் போக்குவரத்து பாதுகாப்பின்மை காரணமாகவே தூதுவராலயத்தில் முடங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

சுமார் 37 பெட்டிகளில் புத்தகங்கள் பாதுகாப்பாக இந்தியாவிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன.

மேலும் ஒருபகுதி தமிழ்நாடு நூலகப் பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. (மா)

## சிவராத்திரி தினம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பழைய வீதி அருள்மிகு வீரபத்திரர் கோவில் சிவராத்திரி தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. நான்கு ஜாம விசேட அபிஷேக ஆராதனைகளும். திருமுறை ஓதல், கூட்டுப்பிரார்த்தனை ஆகியனவும் நடைபெறுகின்றன,

## ஹோம்பிளுன்ஸில் கொள்ளை!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்துள்ள ஹோம் பிளுன்ஸ் லிமிட்டெட்டில்நேற்றுமுன்தின துப்பாக்கி முனையில் 5 தட்டச்சு யந்திரங்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

வான் ஒன்றில் வந்த இனந்தெரியாதவர்கள் இக்கொள்ளையை நடத்தியதாகக் கூறப்படுகிறது.

இக்கொள்ளையைத் தொடர்ந்து அந்த ஸ்தாபனம் உடனடியாக மூடப்பட்டது அருகில் ஒறைக் கதவில் திறக்கப்பட்டிருந்த சில நகைக் கடைகளும் உடனடியாக மூடப்பட்டன.

## ரஜீவ் கருத்து...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புகுந்திருப்பதினாலும் இலங்கையில் தற்போது பெரும் நெருக்கடியான நிலை உருவாகி 71-ம் ஆண்டு பங்களாதேஷில் ஏற்பட்டிருந்த நிலையே அங்கு தோன்றியுள்ளது. இதனால் இப் பிரச்னையை தீர்ப்பதற்கு இந்தியா உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் விடுத்துள்ள கோரிக்கை தொடர்பாக ஹைதராபாத்தில் நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்குபதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## பூஸாவிலிரு....

(1ம் பக்க 3ம்கலதொடர்ச்சி)

மணியம், பொன்னம்பலம் சுந்தரம், அப்புத்துரை செல்வத்துரை, முத்தன் செல்வத்துரை, அப்பையா ஸ்ரீஸ்கந்தராசா, சிவாலி சுந்தரலிங்கம், வெள்ளையன் வாரி சுப்பிரமணியம், வைரமுத்து சிவதுங்கம், கனகன் சிவகுமாரலிங்கம், கதிரவேலு சிறிஸ்வரன், ஏரம்பு சிவலிங்கம், அப்பையா தேவதாஸ், நடராசா தர்மராசா, செல்வத்துரை தனபாலசிங்கம், அப்புவடிவேலு தவச்செல்வம், நடேசு தணிகாசலம், ரத்மை தேவராசா, அப்பையா திமுத்திதாஸ், சிவானந்தம் யோகேஸ்வரன், இராசையா கோபாலகிருஷ்ணன், சோமசுந்தரம் விக்கினேஸ்வரன்.

## 'ஆலால்' ஜீப்...

[1-ம்பக்க3ம்கலத தொடர்ச்சி]

லிருந்த ஜீப் வண்டி இனந்தெரியாத நபர்களால் நேற்று நண்பகல் கடத்தப்பட்டுள்ளது. சாரதியுடன் சென்றுகொண்டிருந்த ஜீப் வண்டி தடுத்து நிறுத்தப்பட்டு சாரதி இறக்கிவிடப்பட்டுக் கடத்தப்பட்டதாம்

பளையிலுள்ள சந்தையில் வைத்தே இந்த ஜீப்வண்டி கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

## கடும்...

(1-ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழர்கள் உட்பட துருக்கி, போலந்து, கம்பூச்சியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த அகதிகள் கடந்த ஆண்டுகளில் பெருமளவில் மேஜெர்மன் வந்திருந்தனர். இவர்களின் எண்ணிக்கை சுமார் 35 ஆயிரம் பேர் என்று கூறப்பட்டது. கடந்த ஆண்டில் மட்டும் பன்னிரண்டாயிரம் பேர் மேஜெர்மனிக்கு அகதிகளாய் வந்துள்ளனர்

இந்த நிலைமையையடுத்து கிழக்கு, மேற்கு ஜெர்மன் நாடுகள் ஊடான எல்லையை மூடுவது குறித்து இந்த இரு நாட்டு அரசுகளும் ஆலோசனை செய்து வருகின்றன. இத்துடன் இரு வருடங்களுக்கு மேல் தொழில் புரிவதற்கு 'பேர்மிட்' வழங்குவதைத் தடை செய்வதற்கும் ஆலோசிக்கப் படுகிறது. (கி)

## முல்லைத் தீவு...

[1ம் பக்க 5ம்கல தொடர்ச்சி]

லயம்:

நா தர்மலிங்கம், பொ. அமலதாஸ், சி. ஞானப்பிரகாசம், ம. சந்திரவதனு, மு லோறன்ஸ் ஆ. கதிர்காமு, வி ஞானேந்திரன், என். எம். தவராஜா, சூ ஜெயக்குமார், ஐ. எல். எல். ஜே. சேகரம், சூ. மரியதாஸ், சு. ஜெயராமன், வி. பாக்கியராசா, எம். இராசம்மா, எஸ் பெனடிற், எஸ் லோரன்ஸ், ஏ ஆரோக்கியநாதர், ஏ. மரியதாஸ், எஸ் மனோகராசா, எஸ். தையல்நாயகி, வி. மகாலிங்கம், வி. லோகேந்திரன், நா கிலோரி, எஸ். விகோரி, எஸ் ஐ ஆரோக்கியநாதன், எஸ். யேசுரத்தினம், ஈ சூசைப்பிள்ளை, கே. போல், லீலாவதி குணசிங்கம், ஏ. தில்லைநாதன், எஸ் பார்வதி, எம். சின்னத்தம்பி,

எம் எஸ். கராச் நலன்புரி சங்க நிலையத்தில் இருந்த அகதிகள்:-

எம். முருகுப்பிள்ளை, கே. சிவராசா, கே. ரவிச்சந்திரன்.

முல்லைத்தீவு முஸ்லிம் வித்தியாசாலை நலன்புரிச் சங்கத்தில் இருந்த அகதி:

சு. பொன்னம்பலம்

முல்லைத்தீவு சிலாபத்துறை நலன்புரிச் சங்கத்தில் இருந்த அகதிகள்:

சி சுப்பிரமணியம் (55வயது) செ. ஐயாத்துரை (44 வயது) ஐ. பாஸ்கரன், (13வயது) எம். ரொபின்சன் [65வயது] நா புவனேஸ்வரி [19வயது], வி மகாதேவன் [33வயது], வி முத்துலிங்கம் [12 வயது], வி. தர்மலிங்கம் [25 வயது]

முல்லைத்தீவிலுள்ள 19 அகதிகள் முகாமிலிருந்த தமிழ் அகதிகளில் 8 முகாம்களில் மேற்கொண்ட கணிப்பீட்டில் இவர்கள் காணவில்லைஎன்பது கண்டுபிடிக்கப்பட்டது ஏனைய முகாம்களில் காணுமல் போனவர்களின் விபரம் திரட்டப்படடு வருகிறது

மேற்படி அகதிகள் முகாம்களி இருப்பவர்கள் முகாம் பொறுப்பதிகாரிகளுக்கு அறிவிக்காமல் வெளியே சென்றிருந்தால் உடனடியாக முகாம்களுக்கு திரும்புமாறு கேட்கப்படடுள்ளனர்

முல்லைததீவு அகதிகள் முகாமிலிருந்து காணுமல் போனவர்கள் விபரங்களைச் சேகப்பதற்கு விசேட உத்தியோகத்தர் ஒருவரை முல்லைத்தீவு அரசாங்க அதிபர்கே ஞானச்சந்திரன் நியமித்துள்ளார். (சூ)

## மறைந்த தமிழ்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

''இதுபற்றி நான் முதன் முதலில் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பினே அன்று இருந்த தமிழ்த் தலைவர்களின் ஒற்றுமையின்மையாலும் தான்தோன்றித்தனத்தினுலும் தான் இன்றுவரை தமிழ் ஈழம் கிடைக்காமல் போய்விட்டது எந்தக் காரியத்துக்கும் முக்கியமாக ஒற்றுமை அவசியம்''

தாம் பிறந்ததும் தமிழ் மண்; படித்தலும் தமிழ் மண்என்று குறிப்பிட்டுள்ள பெரியார், தமது மரணமும் தமிழ் மண்ணிலேயே நிகழவேண்டுமென்றும், தமது இறுதிக் கிரியைகளும் தமிழ் மண்ணிலேயே இடம்பெறவேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

## எம். ஜி. ஆர்.

(1ம் பக்க 2ம்கலத்தொடர்ச்சி)

றில் இக்கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''இந்திய கடற்பிராந்தியத்தில் இலங்கைக் கடற்படையினரின் அத்துமீறிய செயல்கள் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றன. இச்சம்பவங்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்'' என்ருர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்திக்குக் கடிதம் அனுப்பியுள்ளதாகவும், இலங்கைக் கடற்படையினரின் இத்தகைய அத்துமீறிய செயல்களைக் கட்டுப்படுத்த மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுக்கும் என்றும், இதனுல் இராமேஸ்வரம் மக்கள் தமது போராட்டங்களைக் கைவிட்டு அமைதியாக இருக்கவேண்டும் என்றும் முதல்வர் எம் ஜி ஆர். கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த நான்கு மாதங்களாக நோய்வாய்ப் பட்டிருந்த முதலமைச்சர் திரு எம் ஜி ராமச்சந்திரன் சுகமடைந்த பின்னர் இப்பிரச்னை தொடர்பாக வெளியிட்டுள்ள முதல் அறிக்கை இதுவாகும்.

இதே வேளை இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலைத் தொடர்ந்து இராமேஸ்வரம் மீனவர் இரண்டாவது நாளாக நேற்றும் மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்லவில்லை.

## அமைச்சர் லலித்...

[1ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி]

இதனை உறுதிப்படுத்துகின்றன' என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

பெந்தோட்டையில் நிகழ்ந்த நிகழ்ச்சியொன்றில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

## நேற்று...

(1-மபக்க 4ம்கலத்தொடர்ச்சி)

வந்து சேர்ந்தனர்.

இவர்களை மண்டபத்தில் தங்குவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இலங்கையிலிருந்து இவ்வாறு தமிழ் அகதிகள் இந்தியாவுக்கு பெருமளவில் வந்துகொண்டே இருக்கின்ருர்கள்.

சென்றமாதம் 4ம் திகதியில் இருந்து இந்த அகதிகள்வருகை பெருமளவில் அதிகரித்துள்ளது.

## துப்பாக்கிச்...

[1-ப்பக்கத் தொடர்ச்]

நாசமாக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப் படுகிறது

உரும்பிராய் இந்துக்கல்லூரி முன்னிலையில் இருவரின் சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கிடக்கக் காணப் பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## ஆசிரியர்கள்.

(1ம் பக்க 4ம்கலத்தொடர்ச்சி)

யர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ் மாவட்டக் கிளை தீர்மானமொன்றை நேற்று நிறைவேற்றியுள்ளது.

தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியுடனும். வடபிரதேசத் தொழிற்சங்கக் கூட்டுக் குழுவுடனும் மேற்படி ஆசிரியர்சங்கம் இணைந்து தற்போதைய அரசின் தமிழ் மக்களுக்கெதிரான சகல நடவடிக்கைகளையும் எதிர்ப்பதற்கான தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கவும் இ த. ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளதுடன், விரைவில் சட்ட வரையறைக்குட்பட்ட தொழிற்சங்கப் போராட்டம் ஒன்றை நடத்தவும் முடிவு செய்துள்ளது

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற இ. த. ஆ சங்க யாழ். மாவட்ட நிர்வாகக் குழுக் கூட்டத்தில் மேற் குறிப்பிட்ட முடிவுகள் எடுக்கப்பட்டன, (மா)

## இன்று இறுதி..

[1ம்பக்க 5ம் கலத்தொடர்ச்சி]

லம் ஆரம்பமாகும். பெரியாரின் பூதவுடலுக்கு ஜனதிபதியின் சார்பில் உயரதிகாரியொருவர் கொழும்பிலிருந்து வந்து இறுதி மரியாதை செலுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வெளிநாட்டிலிருந்து வரவேண்டிய உறவினர்கள் அனைவரும் வந்து சேர்ந்து விடடனர். சிங்கப்பூரிலிருந்து மூத்தமகள் லிங்காபபிகை மட்டும் வந்து சேரவில்லை. ஏனைய புதல்விகள் லிங்கவதி, லிங்கமணி, லிங்கேஸ்வரி ஆகியோர்கள் ஏற்கனவே இங்கு வந்துள்ளனர்.

புதல்வர்கள், ஞானலிங்கம் சத்தியலிங்கம் ஆகியவர்களே சிதைக்குத் தீயிடுவார்கள்

மல்லிகை மலர்களினுல் சோடிக்கப்பட்ட பேழையில் பூதவுடல் இப்போது வைக்கப்பட்டுள்ளது.

பெரியாரின் வாழ்க்கை விபரமடங்கிய துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்து விநியோகிக்கப்பட்டுள்ளன.

இந்தியா, மலேஷியா, சிங்கப்பூர் மற்றும் இடங்களிலிருந்து ஏராளமான அனுதாபச் செய்திகள் வந்து குவிந்துள்ளன. கொழும்பிலிருந்து ஆரசியல் கட்சிப் பிரமுகர்கள் பலரும் இறுதி அஞ்சலியில் வந்துகொள்வார்கள் என்று கருதப்படுகின்றது.

## இன்று ஊரடங்கு இல்லை

[கொழும்பு]

மகா சிவராத்திரியை முன்னிட்டு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவனியா, மன்னுர் ஆகிய மாவட்டங்களில் இன்றுமட்டும்இரவு நேர ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது.

### ஒலிவர் ருவிஸ்ற்

இடவசதியின்மை காரணமாக இவ்வாரம் ஒலிவர் ருவிஸ்ற் தொடரம்சம் இடம் பெறவில்லை. அடுத்த வாரம் வழமைபோல வெளிவரும் (ஆ-ர்)

## சிறுகதை...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அழுகையை நிறுத்திவிட்டு மீண்டும் கதைத்தாள்'

எனக்கொரு தங்கையிருந்து என்னிலும் சற்றுக்கூட அழகாக இருந்தால் நிச்சயமாய் உன்னைப்பார்க்க வந்தவர் எங்கள் இருவரையும் விட்டுவிட்டு தங்கையைத்தான் கேட்டிருப்பார். எப்படித்தான் வாய் கூசாமல் இப்படிக் கேட்க மனம்வருகிறதோ தெரியாது? இவர்கள்தான் மனிதாபிமானமற்றவர்கள் அக்கா.

வந்திருந்தவர். ''அவசரப்படாமல் யோசித்து முடிவை எடுங்கோ'' என்று சொல்லிவிடடு எழுந்தார்.

இதுதான் எங்கள் முடிவு சித்திரா சொன்னுள்.

இரவு முழுவதும் மீனவுக்குத் தூக்கமில்லை. அழுதழுது தலையணை நனைந்திருந்தது புரண்டு புரண்டு படுத்தவள் இரவிரவாக யோசிசது ஒரு முடிவுக்கு வந்திருந்தாள்.

அடுத்தநாள் மீனு பஸ் ஸிலிருந்து இறங்கி பாடசாலையை நோக்கி நடந்தாள். அப்பொழுது தனிமையாகவே வாழபபோகும் அவளில் ஒரு புதுத்தென்பு தென்படுகிறது.

[யாவும் கற்பனையே]

## கடத்தப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு' ஞானச்சந்திரனது அலுவலக ஜீப் நேற்றுமுன் தினமிரவு யாழ் நகரிலுள்ள கராஜ் ஒன்றில் நின்றபோது இனந்தெரியாதவர்களினல் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tele phone um 22nber389-24126.